

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

அரிமரச் சந்தைக்கான உண்மையான தலைமைத்துவம்

2020

ஆண்டறிக்கை



வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு



அரச மரக் கூட்டுத்தாபனம்

2020 ஆண்டறிக்கை

அரிமரச் சந்தையில் உண்மையான தலைமைத்துவம்

1968 - 2020

52 வருட முடிவுறாத பயணத்தைத் தொடரும்
அரச மரக் கூட்டுத்தாபனம்

மக்களின்
மனதை வென்ற
நிறுவனமொன்றாக
எதிர்காலத்தை நோக்கி

நோக்கு

தேசத்தின் நம்பிக்கையை
வென்ற தரமிக்க அரிமரம் மற்றும்
மரத்திலான
உற்பத்திகளை வழங்குபராகவும்
மரப்பலகைச் சந்தையில்
தலைவராகத் திகழ்தல்

செயற்பணி

எம்மிடம் உள்ள தொழில்நுட்ப
அறிவு நன்மதிப்பு மற்றும்
திறன்களைப் பயன்படுத்தி
சட்டரீதியான சுற்றாடலுக்கு
சாதகமான வகையில் தேசிய
தேவைப்பாட்டின் பிரகாரம் எமது
வாடிக்கையாளர்களின்
அரிமரம் மற்றும் மரத்தாலான
பொருட்களுக்கான கேள்விக்கு
உற்பத்தி செய்து வழங்கல்















கவர்ச்சிகரமான மர உற்பத்திகள்

எம்மை பற்றி

அரசமரக் கூட்டுத்தாபனம் அரசுக்குச் சொந்தமான ஓர் வணிக நிறுவனமாகும். அது 1968.04.04 ஆந் திகதிய 1479/6 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் காணி, நீர்ப்பாசனம் மற்றும் மின்சார கௌரவ அமைச்சரினால் 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டதுடன், 1969 நவம்பர் 07 ஆம் திகதிய 14879 ஆம் இலக்க வர்த்தமானி, 1982 பெப்ரவரி 05 ஆம் திகதிய 178/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், 2001 ஆம் ஆண்டின் ஜுன் 26 ஆம் திகதிய 1190/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2008 பெப்ரவரி 25 ஆம் திகதிய 1538/7 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் மேலும் நாளதுவரையாக்கப்பட்டது. ஈடுபடுத்தப்பட்ட ஆரம்ப மூலதனம் ரூபா 2.5 மில்லியனாகும். 52 வருட அனுபவத்துடன் கூடிய நிறுவனமொன்றாக அரச மரக் கூட்டுத்தாபனம் உயர் தரத்திலான தளபாடங்கள் தேவையுள்ள ஹொட்டெல் உரிமையாளர்களினதும் அரச நிறவனங்களினதும் தளபாட வடிவமைப்பாளர்களினதும் முன்னனி தெரிவாக காணப்படுகின்றது.

அரச மரக் கூட்டுத்தாபனம் மிக உயர்ந்த தரம் வாய்ந்த உயர்தர மரத்திலான தயாரிப்புக்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கும் அதிகபட்ச சேவையை வழங்குவதற்கும் முடிந்தவரை முயற்சி செய்கின்றது. அழகான வீடுகள், ஆடம்பரம் ஹோட்டல்கள், நிர்வாக அலுவலகங்கள் மற்றும் வெளிநாட்டு வாசஸ்தலங்கள் என்பவற்றிற்கு எமது விலைமதிப்பற்ற மர உற்பத்திகள் அதிக பெறுமதியைச் சேர்க்கின்றது. நன்றாக நிர்வகிக்கப்படுகின்ற தோட்டங்களிலிருந்து பெறப்பட்ட பெறுமதியான மரத்தினால் செய்யப்பட்ட சிறப்புகள் அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்கான மரத்திலான பொருட்கள், மரத் தளபாடங்கள் மற்றும் மரத்துண்டங்கள் கிழிக்கப்பட்ட பலகைகள் உற்பத்தி செய்து வழங்குவதனூ டாக வாடிக்கையாளரின் உயர் திருப்தியை எதிர்பார்க்கின்றது. அரச மரக் கூட்டுத்தாபனம் புகழ் பெற்ற ஒரு அரச நிறுவனமாக விளங்குவதுடன் பரவலான உயர்தர மற்றும் நீண்டகால மரபொருட்களை சந்தைக்கு வழங்குவதுடன், தயாரிப்புகள் அதி நவீன தொழில்நுட்பத்துடன் அதிநவீன இயந்திரங்களுடன் கூடிய நவீன வேலைச் சூழலில் உற்பத்திகள் தயாரிக்கப்படுகின்றன.

வசதியான இருக்கை முதல் தனித்துவமான படுக்கையறை தொகுதி வரை வாடிக்கையாளரால் கோரப்பட்ட விலைக்கும் உரிய காலப்பகுதியிலும் உயர் தரத்துடன் கூடிய தயாரிப்புகளை உற்பத்தி செய்து வழங்கும் இயலுமை அரச மரக்கூட்டுத்தாபனத்திடம் காணப்படுகின்றது. எமது உற்பத்திகளின் தரம் எம்மால் உற்பத்திச் செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

- எங்கள் தயாரிப்புகளுக்கு நிலைபேரான முறையில் நிர்வகிக்கப்படும் காடுகளிலிருந்து பெறப்பட்ட முதிர்ந்த மரங்கள் பயன்படுத்தப்படும்.
- இளைய மற்றும் குறைபாடு இல்லாத, உயர் தரமரங்களைப் பயன்படுத்துதல்.
- நன்கு பாதுகாக்கப்பட்ட மரத்தின் பயன்பாடு.
- நவீன உற்பத்தி செயல் முறைகளுக்கு இயந்திரங்களின் பயன்பாடு.
- தரம் மற்றும் பிற சான்றளிக்கப்பட்ட மரம் அல்லாத மூலப் பொருட்களின் பயன்பாடு.
- நவீன பொருத்துதல் மற்றும் முடித்தல் நுட்பங்களைப் பயன்படுத்துதல்.



அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தன்மை

சொத்துக்கள்
ரூபா 7,286 மில்லியன்

ஊழியர்கள்
1,708

விற்பனை வருமானம்
ரூபா 3,982 மில்லியன்

பொறுப்புக்கள்
ரூபா 1,822 மில்லியன்

உற்பத்திகளின் தரம் தவிர கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றப்படுகின்ற அனைத்து வகையான தளபாட தேவைகளுக்காக இலவச மதிப்பீட்டுச் சேவைகள் மற்றும் அளவிடல் சேவைகள் வழங்கப்படுகின்றன. மேலும், எங்கள் சொந்த விவரக்குறிப்புகளுக்கு அமைய அதிக வருமானத்துடன் தயாரிக்கப்படுவதுடன் பெறப்பட்ட உயர்தர தளபாடங்களுடன் சந்தைக்கு வழங்க நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம். எங்கள் தயாரிப்பு முறைகளை விரிவாக்கவும், தொடர்ந்து தரமான சேவையை வழங்கவம் சிறந்த வாடிக்கையாளர் சேவைச் சூழலை மேம்படுத்தவம் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுப்பதற்கும் நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்.

எமது பணிகள்

நிதி அடிப்படையில் உறுதியானது

வீடுகள் மற்றும் சேவை நிலையங்களை நிர்மாணிப்பதற்காக நிலைபேறான மூலப்பொருட்கள் வழங்கப்படும்

நிலைபேறான வன முகாமைத்துவ தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்பட்டு சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் அதிகரிப்பதற்கு பங்களிக்கின்றது

வருமான வரி மற்றும் திறைசேரிக்கு வரி செலுத்தி சமூக அபிவிருத்திக்காக பங்களிப்பு செய்தல்

விரிவான விலகல் பரவும் நவீன மற்றும் சாம்பிரதாய தளபாடங்கள் வழங்கப்படுகின்றன.


பொருளடக்கம்


நிதிசார் முக்கிய பதிவுகள்	08-09
நிறுவனத் தகவல்கள்	10
முகாமைத்துவக் குழு	11-13
தலைவரின் மீளாய்வு	16-18
பொது முகாமையாளரின் மீளாய்வு	20-23
எமது பொறுப்புக்கள் மற்றும் எமது வர்த்தகப் பெறுமானங்கள்	24-25
பணிப்பாளர் சபை	26
சிரேட்ட முகாமைத்துவக் குழு	27
பணிப்பாளர் சபை மீளாய்வு	30-33
எமது மேவுகை வலயங்கள்	34
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை	35-36
வியாபாரப் பொழிப்பு	37-38
தசாப்ததத்தின் தகவல்கள்	39
இடர் முகாமைத்துவம்	42-46
நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு	48-52
கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை	56-65
வருடாந்தக் கணக்குகள்	68-90
நிதிக் கலைச் சொற்கள்	96-97





நிதிசார் முக்கிய பதிவுகள்

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கானது		2020	2019	வித்தியாசம் %
வருமானம் ஈட்டல் தொடர்பான முக்கிய தரவுகள் மற்றும் வீதங்கள்				
வருவாய்	ரூபா '000	3,981,688	4,282,181	-7%
திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் இலாபம்	ரூபா '000	569,521	512,947	11%
திறைசேரிக்கு செலுத்திய வரி	ரூபா '000	511,026	50,000	922%
வருமான வரி	ரூபா '000	105,615	195,524	-46%
வருடத்திற்கான தேறிய இலாபம்	ரூபா '000	463,907	317,424	46%
உரிமைப்பங்கு மீதான ஈட்டல்கள்	%	8.0	5.7	40%
சொத்துக்கள் மீதான ஈட்டல்கள்	%	6.0	4.4	37%
ஐந்தொகை முக்கிய தரவுகள் மற்றும் வீதங்கள்				
மொத்த சொத்துக்கள்	ரூபா '000	7,286,194	7,222,054	1%
மொத்த உரிமைப் பங்கு	ரூபா '000	5,464,633	5,540,551	-1%
மொத்த படுகடன்கள்	ரூபா '000	1,821,561	1,681,503	8%
கடன்/உரிமைப் பங்குகள்	%	33.3	30.3	10%
கடன்/மொத்த சொத்துக்கள்	%	25.0	23.3	7%
ஏனைய தகவல்கள்				
மொத்த ஊழியர்கள்	எண்ணி.	1,708	1,803	-5%
ஊழியர் ஒருவரின் வருவாய்	ரூபா '000	2,331	2,375	-2%
ஊழியர் ஒருவருக்கான இலாபம் [திறை. வரி மற்றும் வரிக்கு முன்]	ரூபா '000	333	284	17%









நிறுவனத் தகவல்கள் -2020

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க அவர்கள் - வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர்

திரு. பந்துல ஹரிஸ்சந்ர அவர்கள் - செயலாளர், வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு

பணிப்பாளர் சபை – 2020

உதயசீ. வலிசிங்ஹ அவர்கள் - தலைவர்- அரச மரக் கூட்டுத்தாபனம்

திருமதி பீ.என். கமகே அவர்கள் - பணிப்பாளர் - (திறைசேரிப் பிரதிநிதி)

டப்ளயூ. ஏ. சீ. வேரகொட அவர்கள் - பணிப்பாளர் -(வன பாதுகாப்பாளர் நாயகம்)

திரு. ஜீ.கே.பிரசன்ன - பணிப்பாளர்

திரு.பீ.டி.பிரீதிகுணதிலக - பணிப்பாளர்

திரு. எச்.கே.எம்.ஜே.எச். குமாரசிங்ஹ - பணிப்பாளர்

திரு. பீ.ஏ. தர்மரத்ன - பணிப்பாளர்

திருமதிஎம்.ஜீ. திலானி சாரிகா - பணிப்பாளர் சபைச் செயலாளர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

திருமதிபீ.என். கமகே - சபைத் தலைவர்

திரு. எச்.கே.எம்.ஜே. குமாரசிங்ஹ - சபை உறுப்பினர்

திரு. ஜீ.கே.பிரசன்ன - சபை உறுப்பினர்

கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தேசிய கணக்காய்வு அலுவலகம்

306/72,பொல்தூவ வீதி, பத்தரமுல்லை

பிரதான வங்கியாளர்

இலங்கை வங்கி

நிதியாண்டு

ஜனவரி 01ஆம் திகதி முதல் திசெம்பர் 31ஆந் திகதி வரை

தொலைபேசி : +94112866600-5

தொலை நகல் : +94112866623

இணையத்தளம் : www.timco.lk



முகாமைத்துவக் குழு - 2020

பொதுமுகாமையாளர்	கலாநிதி என்.டீ. ருவன் பத்திரண	PhD (Forestry), M.Sc. (Forestry), B.Sc.
பிரதி. பொதுமுகாமையாளர்கள்		
பி.பொ.மு. (நிதி)	திரு. ஜீ.டீ.எஸ்.குமாரசிங்க	MBA, B.Sc. (Fin.Mgr), ACA, ACMA
பி.பொ.மு.- (மனிதவளமற்றும் நிர்வாகம்)	திரு. எம்.ஏ.சீ.என். சமரசிங்க	MPM, B.Sc (Business studies) Ad.Dip in Mgt. and Admin.
பி.பொ.மு. - (செயற்பாடு)	திரு. எம்.சீ. தேவேந்திர	M.Sc. (Forestry), B.Sc.
பி.பொ.மு.- (சந்தைப்படுத்தல்) (பதில்)	திரு. டப்ளியு.பீ. சமந்த	M.Sc. (Forestry), B.Sc. N. Dip. Teaching
பி.பொ.மு.-(பொறியியல்.உற்பத்தி)(பதில்)	திரு. ஜீ.ஜீ. திசரகமகே	B.Sc.
உ.பொ.மு. - வலய)	திரு.பீ.கே. அஜித் சந்தன	B.Sc. (Hons.)
உ.பொ.மு. - (வலய)	திரு.எச்.பி. ரஜவத்த	BA
உ.பொ.மு.(ஆராய்ச்சி,அபிவிருத்தி,மற்றும் பயிற்சி)	திரு. சீ.கே. முத்துமால	M.Sc. (Forestry), B.Sc. (Agri.) (Hons.)
முகாமையாளர்கள்		
முகாமையாளர் - (நிர்வாகம்)	திரு.ஏ.ஜீ.எச். குலரத்ன	M.LRHRM, PgD. LRHRM, PQHRM, Dip.in Mgt, Dip. in Forestry, Dip.in English, AMCIPM, ACPM.
முகாமையாளர் - (நிதி)	திருமதி.பி.ரீ.என்.போவத்த	
முகாமையாளர் - (நிதி)	திரு. எச்.ஜீ.ஆர். விஜேநாயக்க	
முகாமையாளர் - (உள்ளகக் கணக்காய்வு)	திரு. எச்.எம்.எஸ். மாதவ	B. Com.sp
முகாமையாளர் - (இயந்திரப் பொறியியல்)	திரு. ஏ.கே.லசித்த எட்மண்ட	B.Sc. (Engineering)
முகாமையாளர் - (கொள்வனவு, கப்பலேற்றல்)	திரு. ரீ. அருண டி சில்வா	
முகாமையாளர் - (தகவல் தொழில்நுட்பம்)	திரு. ஏ.ஜீ. மாதுவகே	
முகாமையாளர் - (பாதுகாப்பு)	திரு. சமிந்த வீரமன்	
முகாமையாளர் - (சிலிப்பர்கள், மின் கம்பங்கள்)	திருமதி. டீ.எம்.என்.பு்பகுமார நில்மிணி	BSc
முகாமையாளர் - (நிதி) (பதில்)	திரு.யூ.எஸ் மடவள	HNDA, MAAT

பிராந்தியமுகாமையாளர்கள்		
பி. முகாமையாளர் (தலைமைஅலுவலகம்)	திரு. ஆர்.விஜேதுங்க	B.Sc. (Agri.)Sp
பி. முகாமையாளர் (தலைமைஅலுவலகம்)	திரு. எம்.டீ.சீ. சம்பத்	BA
பி. முகாமையாளர் (கொழும்பு)	திரு. எச்பி.எஸ். திசாநாயக்கா	BA
பி. முகாமையாளர் (மொனராகலை)	திரு.எம்.கே.ஜீ. வசந்த ராஜ்	
பி. முகாமையாளர் (அனுராதபுரம்)	திரு. எச்.எல். நந்தன	B.Sc.
பி. முகாமையாளர் (அம்பாறை)	திரு. யூ.பீ.எச்.உளுவடுகே	B.Sc.
பி. முகாமையாளர் (இரத்தினபுரி)	திரு. டீ.எச்.ராஜபக்ஷ	M.Sc.(Forestry),B.Sc.
பி. முகாமையாளர் (யாழ்ப்பாணம்)	திரு. எஸ். ஸ்கந்தராஜா	
பி. முகாமையாளர் (குருணாகல்)	திரு. யூ.எஸ்.எம். பெர்னாண்டோ	BA (Sp)
பி. முகாமையாளர் (மாத்தறை)	திரு. டப்ளியூ.ஜ. சாரங்க	B.Sc. (Hon.), MSc (Forestry)
பி. முகாமையாளர் (மின்னேரிய)(பதில்)	திரு.டீ. எல்.அபேநாயக்க	
பி. முகாமையாளர் (கண்டி)(பதில்)	திரு. டீ.ஏ. ஹெந்தவித்தாரண	Dip. in Forestry
அபி. முகாமையாளர் (பண்டாரவளை) (பதில்)	திரு. சுனில் ஜயரத்ன	
பி. முகாமையாளர் (நுவரெலியா)(பதில்)	திரு. டபிள்யு.டீ.பீ.ஜீ. ஜயசேகர	

பிரதிமுகாமையாளர்கள்		
பி. முகாமையாளர் (சட்டம்)	திருமதி. கே.ஐ.டீ.பி. காரியவசம்	LLB, Attorney at Law
பி. முகாமையாளர் (வடிவமைப்பு,தரக்கட்டுப்பாடு)	திருமதி. ஈ.எம்.எம். பெர்னாண்டோ	
தொகுதிப் பகுப்பாய்வாளர்	திரு. டப்ளியூ.எச்.ஏ. சந்திரகுமார	B.Sc.
தொகுதிப் பகுப்பாய்வாளர்	திரு. ஜே.எம்.எம்.பீ. ஜயசுந்தர	B.Sc. (Sp) Hon.
பி. முகாமையாளர் (மனிதவளம்)	திருமதி. எச்.பி. பெரேரா	
பி. முகாமையாளர் (மனிதவளம்)	திருமதி. கே.எஸ்.அபேநாயக்கா	
பி. முகாமையாளர் (நிதி) - கண்டி	திரு. எச்.எம்.பி.பீ. ஹேரத்	
பி. முகாமையாளர் (நிதி) - பூஸ்ஸ	செல்வி ஏ.எல்.டப்ளியூ. துஷாரி டி சில்வா	HNDA, MAAT
பி. முகாமையாளர் (நிதி) - நுவரெலியா	திரு.என்.ரீ.எஸ்.கே.பீ. திலக்கவர்த்தன	HNDA, MAAT
பி. முகாமையாளர் (நிதி) - யாழ்ப்பாணம்	திரு. டப்ளியூ.எம்.ஜீ.எம். விஜேசிங்க	B.Sc. (Bus.Admin.) MAAT.
பி. முகாமையாளர் (நிதி) -மொனராகலை	திரு.ஏ.ஜே. புஷ்பகுமார	B.Sc. (Bus.Admin)
பி. முகாமையாளர் (நிதி) - மின்னேரிய	திரு. எம்.டீ.பீ.எம். திசாநாயக்கா	B.Sc. (Acc)
பி. முகாமையாளர் (நிதி) - தலைமைஅலு	திருமதி. டீ.என்.விஜேசுரிய	B.Sc. (Acc), CTA.
பி. முகாமையாளர் (நிதி) -தலைமைஅலு	திருமதி. எஸ்.வித்தானகே	
பி. முகாமையாளர் (நிதி) - அனுராதபுரம்	திருமதி.டப்ளியூ.கே. ஜயசிங்க	
பி. முகாமையாளர் (நிதி) - கொழும்பு	திரு. எஸ்.பீ.ஏ.ஜே.சீ. சமரகோன்	B.Sc. (Finance)
பி. முகாமையாளர் (நிதி) - பண்டாரவளை	திரு. எஸ்.எம். ஹேவகே	B.BA (Bus.Econ.)
பி. முகாமையாளர் (நிதி) - கல்தேமுல்லை	திரு. டப்ளியூ.ஏ.எல்.எஸ். பெரேரா	
பி. முகாமையாளர் (நிதி) - குருணாகல்	திரு. எஸ்.எச்.ஐ. பிரசாத்	B.BA (Bus.Econ.)
பி. முகாமையாளர் (நிதி) - கப்பெடிபொல	திரு. டி.கே.ஜீ.ஜீ.புஸ்பகுமார	
பி. முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)	திரு.டப்ளியு. டீ. ஏ. எஸ்.திலகரத்ன	
பி. முகாமையாளர் (அரிமரத் தரப்படுத்தல்)	திரு. டீ.பீ.கே.எஸ்.ஜீ. சமரவிக்கிரம	B.Sc. (Mkt.Mgt.)
பி. முகாமையாளர் (அரிமரவழங்கல்)	திரு.பி. ஏ. நலின் தேசப்பிரிய	
பி. முகாமையாளர் (தளபாடவடிவமைப்பு)	திருமதி. ஏச்.எம்.ரீ.எஸ். அபேரத்ன	B.Desing (Hon.) MBA
பி. முகாமையாளர் (அரிமரஆலை)	திரு. எம்.பீ.என். அருணசாந்த	B.Sc. (Bus.Admin.)

பி. முகாமையாளர் (விசாரணை)	திரு. எஸ்.ஏ.டீ. நிரோஷன்	B.Sc. (Bus.Mgt.)
பி. முகாமையாளர் (இயந்திரபொறியியலாளர்)	திரு. எம். கே. ஏம் அன்ஹார்	B.Tech.
பி. முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு)	திரு. எச். எம். எல் ஈ. குணசேக ஹேரத்	B.Sc.
பி. முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு)	திரு. டப்ளியு.எம்.ஜ. எச் வீரசூரிய	B.Sc.
பி. முகாமையாளர் (உற்பத்தி)	திரு ஐ.எம்.ஜே.எஸ்.கே. விக்கிரமசிங்க	PgD.Fin. & Mathematics, B.Sc.

தொகுதி முகாமையாளர்கள்		
பதில். பி. முகாமையாளர் (தளபாடத் தொகுதி) அம்பாறை	வதிரு. என்.பீ.எஸ்.டப். ஜயரத்ன	
பி. முகாமையாளர் - கல்தேமுல்லை	திரு. எச்.எம்.யூ.பீ. சோமவீர	BLE, Dip. IT & M
பி. முகாமையாளர் - பூஸ்ஸ	திரு. ஆர். எஸ்.பள்ளியகே	B.Sc. (Bus.Admin)

பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள்		
பி.பி. முகாமையாளர் (பண்டாரவளை)	திரு. ஐ.பீ. லியனகே	
பி.பி. முகாமையாளர் (மின்னேரியா)	திரு. கே.எம்.பீ.டி.சீ. கபிலரத்ன	
பி.பி. முகாமையாளர் (அம்பாறை)	திரு. யு.ஜே.ஜீ.ஏகநாயக	
பி.பி. முகாமையாளர் (கண்டி)	திரு. ஆர்.சீ. சமன் குமார	
பி.பி. முகாமையாளர் (கண்டி)	திரு. டப்ளியூ.ஏ.எஸ். விஜேசேக்கர	
பி.பி. முகாமையாளர் (யாழ்ப்பாணம்)	திரு. ரீ.பீ. ரமேஷ்	
பி.பி. முகாமையாளர் (இரத்தினபுரி)	திரு. எச்.ஏ. காமினிஅல்விஸ்	
பி. பி. முகாமையாளர் (பிரதான அலுவலகம்)	திரு. எஸ்.சீ. ஜயமான்ன	B.Sc.
பி.பி. முகாமையாளர் (மாத்தறை)	திரு. கே. சந்திரசேன	
பி. பி. முகாமையாளர் (அனுராதபுரம்)	திரு. எம்.டப்ளியூ.டப்ளியூ.பி. முதன்னாயக்கா	
பி. பி. முகாமையாளர் (கொழும்பு)	திரு. ஈ.எம். ஏ. கே. எதிரிசிங்க	
பி. பி. முகாமையாளர் (கொழும்பு)	திரு. எஸ்.பீ. உடகெதர	BA
பி. பி. முகாமையாளர் (மொனராகல)	திரு.பீ. ஹெட்டிஆரச்சி	B.Sc.
பி.பி. முகாமையாளர் (குருணாகல்)	திரு. எஸ்.ஏ. மனோஜ் துஷார	
பி.பி. முகாமையாளர் (குருணாகல்)	திரு. ஆர்.பீ.பீ.டீ. ஜயசிங்ஹ	
பி.பி. முகாமையாளர் (குருணாகல்)	திரு. எஸ்.எம்.எஸ். சிரிவர்தன	

இலங்கையின் பைனஸ் வனப் பயிர்கள்

இலங்கையில் வனப் பயிர்களின் உருவாக்கம் 1870 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பமானது. அன்று முதல் இன்று வரை வனத் தோட்டங்கள் கணிசமான அளவு நிலப்பரப்பில் நடப்பட்டன. தேக்கு, யூகலிப்டஸ், பைனஸ் மற்றும் மஹோகனி போன்ற மர இனங்கள் இதற்காக பயன்படுத்தப்பட்டன. ஊசியிலை மரங்களாகக் கருதப்படும் பைனஸ் மரங்கள் 1960-1990 காலகட்டத்தில் இலங்கையில் நடப்பட்டன. காகிதத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களைத் தயாரிக்கவும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வளம்குறைந்த நிலங்களில் காடுகளை உருவாக்கவும் 1967 ஆம் ஆண்டில் பாரிய அளவில் இவை நடுவதற்கு ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது, இலங்கையின் ஈர மற்றும் இடைநிலை வலயங்களில் 16,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பைனஸ் தோட்டங்கள் உள்ளன. மலைப்பாங்கான பகுதிகளில் காணப்படும் பைனஸ் தோட்டங்களில் தோட்டப் பயிர்கள் இல்லாத காரணத்தினால் நீர் நிலைப் பாதுகாப்பில் அதன் பங்களிப்பு குறைவாகவே உள்ளது.

இலங்கையில் உள்ள பைனஸ் மரங்கள் பொதுவாக 30மீ- 40மீ உயரம் வரை வளரும் மற்றும் நெஞ்சுத்தண்டு உயரத்தில் 40செமீ - 50செமீ விட்டம் வரை வளரும். இது நேரான தண்டுகளை கொண்டது அத்தோடு 100 ஆண்டுகளுக்கும் மேலான ஆயுட்காலத்தை கொண்டது.

ஆரம்பத்தில், இந்த பைனஸ் தோட்டங்கள் மலையகம் மற்றும் தாழ்நில ஈரநிலங்களின் வளம்குறைந்த வரண்ட மற்றும் தரிசு நிலங்கள் மற்றும் இடைநிலை வலயத்தின் "கெக்கில்லா" பயிர் செய்யப்பட்ட நிலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டன.

இலங்கையில் பல வகையான பைனஸ் மர வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் பாரிய அளவிலான பயன்பாட்டிற்காக இரண்டு இனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவையாவன,

- *Pinus caribaea var. hondurensis*
- *Pinus patula*



ஆண்டறிக்கை

அரசு மரக் கூட்டுத்தாபனம்

- தலைவரின் மீளாய்வு
- பொது முகாமையாளரின் மீளாய்வு
- எமது பணிகள்
- எமது வியாபார பெறுமதி
- பணிப்பாளர் சபை
- சிரேஸ்ட முகாமைத்துவ குழு



தலைவரின் மீளாய்வு

“கோவிட்-19 தொற்றுநோய் இந்த வருடத்தில் நாடு முழுவதிலும் தடைகளை ஏற்படுத்திய போதிலும், கணிசமான வெளிப்புற எதிர்மறை சக்திகள் இருந்த போதிலும் எமது நிறுவனம் உறுதியாகவும் வலுவாகவும் செயற்பட்டதன் விளைவாக திறைசேரிக்கு ரூபா 511 மில்லியனை பங்களிப்புச் செய்வதற்கு இயலுமாக இருந்ததென்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.”

2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை முன்வைப்பதில் தலைவராக நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆண்டு முழுவதும் எங்கள் வியாபாரத்தை கொண்டுநடாத்துவதற்கு பணியாளர்களின் தழுவு திறன் மற்றும் நெகிழ்வுத்தன்மை மிக முக்கிய காரணியாக இருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

கோவிட்-19 தொற்று நோய் ஏற்படுத்தியுள்ள உலகளாவிய சுகாதார நெருக்கடியானது உயிர்களை மற்றும் வாழ்வாதாரத்தை பாதித்தது மட்டுமல்லாமல், உலகெங்கிலும் உள்ள பொருளாதாரங்களில் முன்னொரு போதும் நிகழ்ந்திராத தாக்கத்தை ஏற்படுத்தியது, மேலும் அதன் பாதிப்புக்கள் மற்றும் பின்விளைவுகளை எதிர்கொள்வதற்கு கணிசமான காலம் எடுக்கும். இலங்கையர்களாகிய எங்களைப் பொறுத்தவரை, 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பேரழிவிலிருந்து தேசம் மீண்டு வரும் நிலையில் இந்த வைரஸ் தொற்றானது இது வரை கண்டிராத மிகப்பெரிய பாதிப்பிற்கு தேசத்தை மீண்டுமொருமுறை தள்ளி எமது பின்னடைவை மேலும் சோதனைக்கு உள்ளாக்கியது. எங்கள் நிறுவனத்தைப் பொறுத்தவரை, தொற்று நோயின் தாக்கம் இருந்த போதிலும், அத்தகைய சூழலில் தொடர்ந்து செயற்பாடுகள் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகக் கடினமான பணியாக இருந்தது. எங்கள் விவேகமான மற்றும் செயலூக்கமான நடவடிக்கைகள் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டில் 11% இலாப வளர்ச்சி வீதத்துடன் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா. 570 மில்லியன் இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

நாங்கள் எப்போதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளோம். மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், கோவிட்-19 பாதுகாப்பு நடைமுறைகளையும் உள்வாங்கி சுகாதார அமைச்சினால் விதிக்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சுகாதார நடைமுறைகள் விரிவுபடுத்தப்பட்டு அவை உறுதியாக பின்பற்றப்பட்டது.


இது புதுமையான மற்றும் உயர்தர தயாரிப்புகளை உற்பத்தி செய்வதன் மூலம் எமது ஆற்றலில் கவனம் செலுத்தும் ஆண்டாகும். புதிய இயல்பான நிலைமைகளின் கீழ், பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் செயலூக்கம் பெற்ற பணியாளர்களுடன் எங்கள் செயற்பாடுகள் 2020 ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்டன. அதே நேரத்தில், மீண்டும் எமது சுற்றுச்சூழல் மற்றும் சமூக கலாச்சார நிகழ்ச்சிகளை உயர் மட்டத்தில் விரிவுபடுத்தினோம்.

எமது நிறுவனத்தின் மிகவும் மதிப்புமிக்க சொத்து மனித வளம் என்பதை நாம் மிக உறுதியாக நம்புகின்றோம். 2020 ஆம் ஆண்டில், எமது ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை வழங்கும் செயற்பாட்டில் தொடர்ந்து முதலீடு செய்தோம், இது நிறுவனத்தின் இலக்குகளை அடையும் அதே வேளையில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்ந்த மட்டத்தில் சேவை செய்வதில் உறுதிபூண்டுள்ள ஊழியர்களின் திறன் மற்றும் தகுதியை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டதாகும்.

நிதிநிலை செயலாற்றுகை


-3.6% பொருளாதார வளர்ச்சியின் கீழ் இருந்த போதும், நிறுவனமானது 2020 நிதியாண்டில் ரூபா 3,982 மில்லியன் வருமானமாக ஈட்டியதோடு இது கடந்த வருட வருமானமான ரூபா 4,282 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் சிறியளவான சரிவாகும்.

இருப்பினும், இந்தப் பின்னடைவான காலகட்டத்திலும் அரச மரக் கூட்டுத்தாபனம் திறைசேரிக்கு வரி மற்றும் அறவீடுகளுக்கு முன்னரான இலாபமாக ரூபா 570 மில்லியன்



வருமானமாக ஈட்டித் தந்ததோடு 2020 இல் வரிக்குப் பிந்திய இலாபமாக ரூபா 464 மில்லியன் பதிவு செய்ய முடிந்தது. இதனால், திறைசேரிக்கு வரி மற்றும் அறவீடுகளுக்கு முந்தைய இலாபம் மற்றும் வரிக்கு பிந்திய இலாபமாக முறையே 11மூ மற்றும் 46மூஆக அதிகரித்துள்ளது. 2019 இல் பதிவான புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடுகையில், அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக, இந்த கடினமான காலகட்டத்திலும் வரிக்குப் பிந்தைய இலாபத்தில் இருந்து திறைசேரிக்கு ரூபா 511 மில்லியன் வரியை பெருமையுடன் பங்களிப்புச் செய்துள்ளோம்.

இதேபோல்,அறவீடுகளுக்கு முன் மற்றும் வருமான வரிக்குப் பின்னர் சராசரி சொத்துகள் மீதான வருமாமனம் (ROA) 2019 இல் 4.4% இலிருந்து 2020 இல் 6% ஆக அதிகரித்துள்ளது, அதே சமயம் அறவீடுகளுக்கு முன்



மற்றும் வருமான வரிக்குப் பின்னர் சராசரி சொத்துரிமை (ROE) மீதான வருமானம் 2019 இல் 5.7% இலிருந்து 2020 இல் 8மூ ஆக அதிகரித்துள்ளது. இது அனைத்து சொத்து மற்றும் சொத்துரிமை வருமானத்தை ஈட்டுவதற்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளது என்பதோடு, நிறுவனம் பொருத்தமான செயல்பாட்டு மூலதன முகாமைத்துவ கொள்கையை பராமரிக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

முன்னோக்கிய பயணம்

கோவிட்-19 தொற்று நோய் உலகம் முழுவதும் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கி வருவதால், எதிர்காலத்தில் எவ்வகையான தடைகள் வந்தாலும் கூட்டுத்தாபனத்தின், தொழில் துறையின் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்காக நமது விடாமுயற்சி மற்றும் முன்னேறுவதற்கான அசைக்க முடியாத திறன் குறித்து உறுதியாக இருப்போம். புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடன், முன்னோக்கி செல்லும் பயணத்திற்குத் தேவையானதை மாற்றியமைத்து, வரவிருக்கும் ஆண்டுகளில் நாங்கள் நிர்ணயித்த இலக்குகளை அடைவதற்கு ஆவண செய்வோம்.

நாங்கள் ஒரு சவாலான புத்தாண்டில் அடியெடுத்து வைத்திருப்பதனால் நாங்கள் தொடர்ந்து சூழ்நிலை பகுப்பாய்வுகளை மெற்கொண்டு வருவதோடு திட்டங்கள் செயற்படுத்தப்படும் பொழுது அவற்றை மதிப்பாய்வு செய்வோம், ஆனால் வலுவான அடித்தளங்கள், உறுதியான தந்திரோபாயம் மற்றும் வணிக மாதிரிகளின் மீட்டெழுச்சி மற்றும் சுறுசுறுப்பு ஆகியவற்றில் நாங்கள் உறுதியாக உள்ளதோடு அவை கடந்த ஆண்டு வெற்றியைக் கொண்டு வருவதில் இன்றியமையாததாக இருந்ததோடு சவால்களைச் சமாளிப்பதற்கு அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு உதவியாக இருந்தது.

அரச மரக் கூட்டுத்தாபனமானது தமது முக்கிய வியாபாரத்தை கட்டியமைத்துக் கொள்வதற்காக மற்றும் வளர்ச்சியடையச் செய்வதற்காக சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் நன்கு தயார் நிலையில் உள்ளது என்று நான் நம்புகிறேன். அதே நேரத்தில், எங்களது வளர்ச்சிப் பயணத்தை எளிதாக்க,

எங்கள் வணிக நாமத்தில் மேலும் முதலீடு செய்து, எங்களின் ஐந்தொகைக்கு புறம்பான காரணிகளையும் வலுப்படுத்த எதிர்பார்க்கிறோம். எங்கள் பங்குதாரர்களுக்கு நாங்கள் உருவாக்கும் மதிப்பை மேலும் உயர்த்துவதற்கான எமது விருப்பத்தால் நாங்கள் உந்தப்படுகிறோம் என்பதை நான் வலியுறுத்துகிறேன். அத்தோடு, அரச மரக் கூட்டுத்தாபனம் சமூக மற்றும் சுற்றுச்சூழலில் பொறுப்புள்ள அமைப்பாக அதன் அடையாளத்தை வலுப்படுத்தும் அதே வேளையில், ஒவ்வொரு வியாபாரத்தினூடாகவும் பங்குதாரர்களுக்கு நிலையான மதிப்பை தொடர்ந்து வழங்குவதை உறுதிசெய்வதில் அதன் முழுக் கவனத்தையும் செலுத்தும். மேலும், ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு தற்போதைய அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிகளை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

நன்றி நவிலல்

எமக்கு ஒத்துழைப்பை வழங்கியமைக்காக, கௌரவ வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர், இராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் அலுவலர் குழாம், வனப் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்கள் மற்றும் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் பணிப்பாளர் சபை சார்பாக இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு பொது முகாமையாளர் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களின் பங்களிப்புகள், அவர்களின் அறிவு மற்றும் திறமை மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக எமது வெற்றிக்கான பயணத்தில் அவர்களின் அளவற்ற விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக பணிப்பாளர் சபை சார்பாக விஷேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மறறும்மரம் மரம் சார்ந்த உற்பத்திகளைப பயன்படுத்தும் எங்களது வாடிக்கையாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2020 ஆம் வருடம் இலகுவாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை, எனினும் குறுகிய கால சவால்களைப் பொருட்படுத்துவதை விட நீண்ட கால சவால்களுக்கு எப்போதும் கவனம் செலுத்துவதோடு எமது திறனை முழுமையாகப் பயன்படுத்தி சிறந்த வெளிப்பாடுகளை தொடர்ந்து வழங்குவோம். எங்கள் இலக்குகளை அடைவதன் ஊடாக எமது பங்குதாரர்களுக்கு நல்ல வருமானத்தை தொடர்ந்து வழங்குவதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

இறுதியாக, எதிர்காலத்தில் மர உலகில் அரச மரக் கூட்டுத்தாபனம் முதன்மையான வர்த்தக நிறுவனமாகவும் தன்னியல்பாகவும் திகழும் என்பதை அனைத்து பங்குதாரர்களுக்கும் நான் உறுதியுடன் கூற விரும்புகிறேன்.



உதய சீ. வலிசிங்ஹ
தலைவர்
அரச மரக் கூட்டுத்தாபனம்



மத்திய அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட Pinus caribaea var hondurensis இனமானது பரந்த அளவிலான மண் மற்றும் காலநிலைகளில் வளர்கிறது. இந்த இனம் இலங்கையில் 900 மீ - 1600 மீ உயர பிரதேசங்களுற்கு மிகவும் பொருத்தமானது. மெக்சிகோவை பூர்வீகமாகக் கொண்ட ைரௌ ியவரடய இனங்கள் ைரௌ உயசடியநய எயச ாழனெரசநளௌள இனத்தை ஒத்ததோடு 1600 மீட்டருக்கு மேல் உயர பிரதேசத்தில் வளரக் கூடியது. இந்த இரண்டு பைனஸ் இனங்கள் புல் இனங்கள் மற்றும் தாவர இனங்களுடன் நன்கு ஈடுகொடுக்கக் கூடியதென்பதால் தரிசு நிலங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.

Pinus caribaea var. hondurensis இலங்கையின் உயரம் குறைந்த மலைப் பிரதேசம், மத்திய மற்றும் தாழ்நில ஈர வலய பிரதேசங்களிலும் Pinus patula உயர் மலைப் பிரதேசங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. மலையகத்தில், பைனஸ் தோட்டங்கள் நீரினை சேமிப்பதற்கு மற்றும் மர உற்பத்தியை இலக்காகக் கொண்டிருந்தன. 1980 களில் அதிக நீர் பிடிப்பு பகுதிகளின் பாதுகாப்பிற்காக பைனஸ் மரங்கள் நடப்பட்டன. அதன்படி, மண் அரிப்பைத் தடுக்கவும், வண்டல் மண் படிவதைத் தடுக்கவும், வறண்ட காலங்களில் தாழ்வான நீர்த்தேக்கங்களுக்கு நீர் வருவதை உறுதி செய்யவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. மற்ற பகுதிகளில் பைனஸ் தோட்டங்கள் இயற்கை காடுகளை சுற்றி ஒரு இடை வலயத்தை உருவாக்கும் நோக்கத்திற்காக நடப்பட்டது. அத்தோடு நகர்ப்புற காடுகள் ஏற்படுத்தப்படும் போது பைனஸ் தோட்டங்களின் அழகியலானது பயன்படுத்தப்பட்டது.



பொது முகாமையாளரின் மீளாய்வு

"அரச மரக் கூட்டுத்தாபனமானது தற்போது பைனஸ் மர உற்பத்திகளுக்கான உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்துகின்றது, ஏனெனில் அது பரந்தளவிலான மர பண்புகளைக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் பல்வகைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் தயாரிப்புகளில் முதலீடு செய்கிறது"

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் (பிரதான நிறைவேற்று அதிகாரி) என்ற வகையில், 2020 ஆண்டறிக்கைக்கான செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த ஆண்டு எனது செய்தியில் தெரிவிக்கப்பட்டபடி, 2020 ஆம் ஆண்டிற்கான ஒவ்வொரு அம்சத்திலும் சிறந்த முடிவுகளை வழங்குவதற்காக கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் அரச மரக் கூட்டுத்தாபனத்தினை வழிநடத்தியதில் நான் மிகுந்த திருப்தி அடைகின்றேன்.

கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையிலும் பெற்றுக் கொண்ட வெற்றி

2020 ஆம் ஆண்டு எனது தொழிற்துறை வாழ்க்கையில் நான் சந்தித்த மிகவும் சவாலான மற்றும் அதே நேரத்தில் மிகவும் எதிர்பார்ப்பான ஆண்டுகளில் ஒன்றாகும், ஏனெனில் கோவிட்-19 தொற்றுநோய் உலகம் முழுவதும் பரவியதன் காரணமாக மிகவும் சவாலான ஆண்டாக மாறியது. என் வாழ்க்கையிலோ அல்லது நான் தொழிலில் ஈடுபட்ட காலத்திலோ ஒருபோதும் இதுபோன்ற ஒரு நெருக்கடியான காலகட்டத்தை நான் எதிர்கொள்ளவில்லை. உலகம் முழுவதும் கொரோனா தொற்றுநோய் காரணமாக கடந்த ஆண்டிலிருந்து இக்கட்டான சூழ்நிலையை இன்னும் எதிர்கொண்டு வருகின்றதோடு சகல வியாபாரங்களும் நிதி ரீதியாகவும் செயல்பாட்டு ரீதியாகவும் கணிசமாள அளவு பாதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய கடினமான நேரத்திலும் எமது ஊழியர்களின் செயல்திறன் மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு எதிர்பார்த்த மீட்பு வேகத்தை விட வேகமாக இலக்குகளை அடைய முடிந்தது.

நாட்டின் தனிமைப்படுத்தல் மற்றும் அவசரகாலச் சட்டங்களைக் கடைபிடிக்க வேண்டிய சந்தர்ப்பத்தில், எமது ஊழியர்கள் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதை உறுதிசெய்து கொண்டு தேசிய மட்டத்தில் எங்களிடம் எதிர்பார்க்கப்படும் சேவையை வழங்குவதற்காக எமது பணிகள் தடையின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வதற்கு எமது வணிகத் திட்டத்தில் புதிய நெறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது. 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மே மாத நடுப்பகுதி வரை நாடளாவிய ஊரடங்கு மற்றும் பிற காலங்களில் இடைவிடாத தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் இருந்தபோதிலும், கோவிட் - 19 இன் அபாயத்துடன் இலக்குகளை அடையும் நோக்கிலும் இலாபத்தை ஈட்டும் நோக்கிலும் அரச மரக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மிகவும் பாதுகாப்பாக இதில் பங்குகொண்டனர். நான் அவர்களுக்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக எனது விஷேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பல சவால்களை எதிர்கொண்ட இந்த எதிர்பாரா மற்றும் நிலையற்ற தன்மையான காலகட்டத்தில் எமது ஊழியர்கள் அனைவரினதும் ஆக்கபூர்வமான அணுகுமுறை காரணமாக சிறந்த செயல்திறனுடன் செயல்படுத்த முடிந்தது என்று நான் நம்புகிறேன்.

சாதாரண நிலைக்கு அப்பால் எங்களின் உண்மையான பலம் மற்றும் வாய்ப்புகளை நாங்கள் கண்டறிந்த ஒரு உற்சாகமான காலகட்டமாகவும் இது இருந்தது. வீட்டில் இருந்தோ அல்லது வீட்டிற்கு அருகிலிருந்தோ வேலை செய்வது, ஒன்றிணைவதையும், பணியாளர்கள் வைரஸால் பாதிக்கப்படுவதையும் குறைக்க ஏதுவாகவிருந்தது. நாங்கள் சரியான நேரத்தில் நடவடிக்கைகளை எடுத்தமை எமது ஊழியர்களைப் பாதுகாத்ததோடு தொற்றுநோயை வெற்றிகரமாக நிர்வகிக்கவும் முடிந்தது. ஊழியர்களின் பங்களிப்பிற்காக குறிப்பாக இந்த சவாலான நேரத்தில் அரச மர கூட்டுத்தாபன வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதில் முன்னின்று பணியாற்றியவர்கள் மற்றும் முக்கிய பங்கு வகித்தவர்களை மீண்டும் ஒருமுறை நான் பாராட்ட விரும்புகிறேன். வேலை செய்வதற்கான புதிய வழிகளுக்கு முன்கூட்டியே மாறுவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தொடர்ச்சியான செலவுக் கட்டுப்பாடு மற்றும் உற்பத்தித்திறன் நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் கொடுக்கப்பட்ட தழுவல் மற்றும் ஆதரவு ஆகியவை நெகிழ்ச்சியுடன் இருக்கவும் அதன் நிதி நிலைத்தன்மையை பராமரிக்கவும் உதவுகின்றன. கோவிட் 19 இற்காக அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட சிறப்பு நிதிக்காக தங்கள் ஒரு நாள் சம்பளத்தை வழங்கியதன் மூலம் சாத்தியமான பேரழிவைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட விரைவான நடவடிக்கைக்காக விழிப்புடன் இருக்கும் எங்கள் ஊழியர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

கடந்த 52 ஆண்டுகளின் முன்னேற்றம்

அரச மரக் கூட்டுத்தாபனம் 2020 ஆம் ஆண்டில் தனது 52 வருட பெருமைமிக்க வரலாற்றைக் கடந்தது. இந்த வெற்றிக்கு நற்பெயருடனான நம்பிக்கைப் பிணைப்பு ஒரு காரணமாக இருக்கலாம் என்று நம்புகிறேன். தற்போது அரச மரக் கூட்டுத்தாபனமானது 12 பிராந்திய அலுவலகங்கள், 53 விற்பனை நிலையங்கள் மற்றும் செறிவூட்டல் மற்றும் பதப்படுத்தல் ஆலைகளுடனான 3 தளபாட உற்பத்தி தொழிற் சாலைகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 8 தளபாட காட்சியகங்களைக் கொண்டுள்ளது. நீண்ட கால திட்டமிடப்பட்ட உத்திகளுடன், தேசிய மட்டத்தில் இருந்து சர்வதேச மட்டங்களுக்கு எங்கள் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் நம்பிக்கையுடன் எங்கள் தொழிற்சாலைகள், மரக்குற்றி அரிக்கும் ஆலைகள், செறிவூட்டல் ஆலைகள் மற்றும் பதப்படுத்தும் ஆலைகளை ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் எங்கள் உற்பத்திகளை விரிவாக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்கு தற்போது அடித்தளம் இடப்பட்டு வருகிறது.

எவ்வாறாயினும், நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார பின்னணியில் நாம் நாளுக்கு நாள் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை நோக்கும் பொழுது இது மிகவும் சுமூகமான மற்றும் எளிதான பணியாக இல்லை என்பது தெளிவாகிறது.

நிதிசார் தொலைநோக்கினை முன்னோக்கி

குறைபாடுகள், அச்சுறுத்தல்கள் மற்றும் பலம் மற்றும் எதிர்கால வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்காக, சவாலான 2020ம் ஆண்டின் நிறுவன வருமானத்தை மீள் நோக்குவது மிகவும் அவசியமாகும். 2020 ஆம் ஆண்டில் அரச மரக் கூட்டுத்தாபனம் 3,982 மில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளது. 2019 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் இது ஒரு சிறிய குறையாக இருந்தாலும், ஆண்டின் வரிக்கு முந்திய இலாபமாக 570 மில்லியன் ரூபா மற்றும் வரிக்குப் பிந்திய இலாபமாக 464 மில்லியன் ரூபாவாக இருந்தது. நாம் 2020 ஆம் ஆண்டில் திரைசேரிக்கு 511 மில்லியன் ரூபா தொகையை வரியாக செலுத்தினோம். பொது முகாமையாளர் என்ற வகையில், இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையில் இவ்வளவு பாரிய சாதனையைப் பெறுவதற்கு நிர்வாகத்தினர் மற்றும் சக ஊழியர்களின் ஒத்துழைப்புடன் நிறுவனத்தை நேரடியாக வழிநடத்தியதில் நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். இருப்பினும், இந்த கொரோனா தொற்றுநோயினை உலகிலிருந்து அகற்றுவதற்கான பொருத்தமான மருந்தினை இன்னும் கண்டுபிடிக்காத காரணத்தினால் இத்தொற்று நோயானது அடுத்த சில ஆண்டுகளுக்கு முன்னோக்கி செல்லும் வாய்ப்புள்ளது. எனவே, கடந்த ஆண்டில் நாம் மேற்கொண்டது போல் தகுந்த உத்திகளைக் கையாண்டு வரவிருக்கும் சூழ்நிலைகளுக்கு முகம் கொடுப்பதற்கு தயாராக வேண்டும்.

நம்பகமான தரமான தயாரிப்புகளை தொடர்ந்து வழங்குதல்

கடந்த வருட காலத்தில், எமது நடவடிக்கைகள் நிதி நடவடிக்கைகளுக்கு மாத்திரம் மட்டுப்படாது, செயற்பாட்டு மற்றும் மனிதாபிமான செயற்பாடுகளை மேற்கொண்டு வெற்றியடைந்தோம். இன்றுவரை, இலங்கையில் மர விநியோகத்தில் அரச மரக் கூட்டுத்தாபனம் முன்னணி நிறுவனமாக திகழ்கிறது. மற்ற மரத் தொழில் நிறுவனங்களுடன் போட்டியிட்டு, மக்கள் மனதை வென்ற அமைப்பாக இருப்பது பெரிய சவாலாக உள்ளது. எவ்வாறாயினும், தளபாடங்கள் விற்பனை செய்வதோடு மரக்கட்டைகள், தரித்த மரக்கட்டைகள், தாங்கு கட்டைகள், வேலிக் கம்பங்கள், யானைக் கம்பங்கள் மற்றும் இணைக்கும் கம்பங்கள் போன்றவற்றை விற்பனை செய்ததன் மூலம் எமது பணியை சிறந்த முறையில் செய்துள்ளோம் என்பதை நிரூபித்துள்ளோம்.

முன்னைய ஆண்டுகளைப் போலவே, 2020ம் ஆண்டும் மரக்கட்டைகள், தரித்த மரக்கட்டைகள் மற்றும் தாங்கு கட்டைகள் வர்த்தகத்தில் சிறப்பாகச் செயல்பட முடிந்தது. வசதியான, நம்பகமான, நன்கு முடிக்கப்பட்ட கவர்ச்சிகரமான தளபாடங்களின் தயாரிப்பு காரணமாக அரச மரக் கூட்டுத்தாபன தளபாடங்கள் இன்னும் நாட்டின் நம்பிக்கையை வென்றுள்ளது. அரச மரக் கூட்டுத்தாபனம் எப்பொழுதும் எமது பாரம்பரிய தளபாட உற்பத்தி மற்றும் விரல் இணைந்த தளபாட தயாரிப்புகளுக்காக

சிறந்த தரவரிசைகளை வென்றது. வழக்கமான வாடிக்கையாளர்கள் மற்றும் புதிய வாடிக்கையாளர்களும் சிறந்த தரம், தளாடங்களின் நியாயமான விலை மற்றும் எங்கள் சில்லறை விற்பனையாளர்களால் அவர்களுக்காக வழங்கப்படும் சிறந்த சேவை ஆகியவற்றில் திருப்தி அடைந்துள்ளனர். எனவே, அவர்கள் எப்பொழுதும் எங்கள் தளபாட காட்சியறைகளைத் தொடர்புகொண்டு, அவர்கள் செலுத்தும் பணத்திற்கு நியாயமான விலையில் சிறந்த தயாரிப்பைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றனர். மேலும், அவர்களுக்கு சிறந்த தரமான தயாரிப்புகளை ஏமாற்றாமல் வழங்க நாங்கள் எப்போதும் உறுதியளிக்கிறோம். புகழ்பெற்ற அரச நிறுவனம் என்றவகையில் நாம் எப்போதும் இலாபம் ஈட்டுவதை விட சிறந்த சேவையை வழங்குவதில் முன்னிற்கின்றோம். கோவிட் போன்ற கடினமான சூழ்நிலைகளை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும், எங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை சிறிதளவும் சிதைக்காமல் இருப்பதனை உறுதியளிக்கிறோம்.

விஞ்ஞான கட்டமைப்பின் மூலம் தரமான சேவையை வழங்குதல்

மேற்கூறியவற்றைத் தவிர, எங்கள் பணியாளர்கள் மரங்கள் தொடர்பான பல ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொண்டனர், கடந்த ஆண்டில் பயணத்திற்காக செலவிடும் நேரத்தை வீணடிக்காமல், குறித்த காலத்தில் அதிகபட்ச பலனுள்ள விடயங்களுக்காக செலவிட்டு ணுழழஅ தொழில்நுட்பத்தினூடாக மாநாடுகளில் பங்குபற்றி அவ்வராய்ச்சிகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. இச் செயற்பாடு வெற்றியளித்தது.

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் மற்றும் அதன் செயல்முறைகள் விஞ்ஞான கருத்துக்கள் மற்றும் பின்புலங்களுடன் ஒத்துப் போவதால், இலங்கையின் மரங்கள் பற்றிய ஆராய்ச்சி ஆய்வுகள் எப்போதும் நடாத்தப்பட்டு வருகின்றன. மரத்தை அடையாளம் காணுதல், மரத்தின் பண்புகள் மற்றும் பதப்படுத்தும் மற்றும் பாதுகாப்பு நுட்பங்கள் தொடர்பான பல ஆய்வக சோதனைகளைச் செய்த பிறகு, மரச் சான்றிதழ் அறிக்கைகளை உரிய அதிகாரிகளுக்கு வழங்கும் ஒரே அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக அரச மரக் கூட்டுத்தாபனம் திகழ்கிறது. 2020 ஆம் ஆண்டில் மரம் தொடர்பான 207 சான்றிதழ் அறிக்கைகள் எங்களால் வழங்க முடிந்தது.

சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகளுக்குக் கைகொடுத்தல்

அத்தோடு, அரச மரக் கூட்டுத்தாபனம் 14 பிராந்தியங்களில் 26 நாற்றுப்பண்ணைகளை பராமரித்ததோடு, முக்கியமாக கூட்டுத்தாபனத்தின் சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் பெறுமதியான மர இனங்களின் மரக்கன்றுகளை உற்பத்தி செய்தது. பல்வேறு அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் ஏஎற்பாடு செய்யப்பட்ட மரம் நடும் திட்டங்களுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நாற்றுப்பண்ணைகளில் சுமார் 120,000 மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு 78,657 மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டதோடு அவை, “வனரோபா மரம் நடும் திட்டம்”, “துருஜனசிசு வங்கி மரநடுகை திட்டம்”, “உலக சுற்றாடல் தின நிகழ்ச்சிகள்” மற்றும் “சர்வதேச வன நாள் நிகழ்ச்சிகள்” போன்ற மரம் நடும் நிகழ்ச்சிகளுக்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக குப்பாயாழ்ப்பாணம், பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய பிராந்திய அலுவலகங்களூடாக இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனம் என்ற வகையில், சுற்றுச்சூழல், காடுகள், சமூகக் காடுகள், மரங்களை அடையாளம் காணல் மற்றும் மரத்தின் நிலையான பயன்பாடு குறித்து பொதுமக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஒரு பொறுப்புள்ள அறிவார்ந்த தரப்பாக, அரச மரக் கூட்டுத்தாபனமானது ஆசிரியர்கள் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு வளவாளர்களை வழங்கி தனது பங்களிப்பை வழங்கியது. கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக, நேரடி தொடர்புகள் மற்றும் கூட்டங்களைத் தவிர்க்க வேண்டியிருப்பதால், நேருக்கு நேர் கருத்தரங்குகள் அல்லது பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவது தடையாக இருந்தது. ஆனால் இந்த சூழ்நிலைகளிலும் கூட, 654 ஊழியர்களுக்கு அவர்களின் தொழில்முறை திறன்கள், பொதுவான திறன்கள் மற்றும் அவர்களின் தொழிழற்துறைசார் அறிவை மேம்படுத்த எங்களால் பயிற்சியளிக்க முடிந்தது. அதற்கு மேலதிகமாக 2020 ஆம் ஆண்டில் சுற்றாடல் அமைச்சின் ஒத்துழைப்போடு காலி, கலேகனவில் 150 விஞ்ஞான ஆசிரியர்களுக்கு சுற்றாடல் விஞ்ஞானத்திற்காக பயிற்சியளிக்கப்பட்டது.

ஊழியர்களின் முன்னேற்றத்திற்கான அபிலாஷைகளை உறுதி செய்தல்

இந்த ஆண்டும் ஊழியர்களின் பணிப் பாதுகாப்பை உறுதிசெய்து ஊழியர்களின் நம்பிக்கையை வளர்க்கும் வகையில் ஊழியர்களின் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள என்பன வெளிப்படையான மற்றும் நியாயமான முறையில் மேற்கொள்ளப்பட்டன. நிறுவனத்தின் கொள்கைகளை செயற்படுத்துதல் தொடர்பாக எழும் சிக்கல்களைத் தீர்ப்பதில் அனுபவம் வாய்ந்த நிர்வாக ஊழியர்களால் அனைத்து மகிழ்வான மற்றும் கடினமான நிலைமைகளிலும் எடுக்கப்படும் தீர்மானங்களை சரியான நேரத்தில் எடுப்பது, அவற்றிற்கு காட்டும் கரிசனை மற்றும் மேற்கொள்ளும் முயற்சிகள் என்பன நிறுவனத்தின் வெற்றிக்கு பின்னால் உள்ள முக்கிய இரகசியமாகும். நிர்வாகமும் பணியாளர்களும் பல சவால்களுக்கு மத்தியில் பணிப்பாளர் சபையுடன் ஒத்துழைத்த விதத்தை நாங்கள் பாராட்டுவதோடு அதனை மிகவும் மதிக்கிறோம்.

எதிர்கால உபாயங்கள்

அரச மரக் கூட்டுத்தாபனமானது தற்போது பைனஸ் மர உற்பத்திகளுக்கான உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்துகின்றது, ஏனெனில் அது பரந்தளவிலான மர பண்புகளைக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் பல்வகைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் தயாரிப்புகளில் முதலீடு செய்கிறது. பைனஸ் மரமானது தளபாடம், எளிய நிர்மாணங்கள், வேலிகள், கதவு மற்றும் ஜன்னல் சட்டகங்கள், சீலிங் பலகைகள் மற்றும் வெளிநாடுகளில் தாங்கு கட்டைகள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும் பைனஸ் மரத்தை பொம்மைகள், அலங்கார பொருட்கள், பொதிகட்டுதல் மற்றும் சுவர் மரச்சட்டங்கள் போன்ற புதுமையான வடிவமைத்த பொருட்களின் உற்பத்தியிலும் பயன்படுத்தலாம். இது பல நாடுகளில் விரல் மூட்டு உற்பத்திகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பூசா கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள விரல் மூட்டுப் பிரிவினால் பைனஸ் மர தளபாடங்கள் மற்றும் மரப் பலகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றது.

ஆண்டுதோறும், முதிர்ந்த பைனஸ் காடுகள் அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் அழிக்கப்பட்டு உள்நாட்டு அல்லது வணிக வனத் தோட்டங்களாக மாற்றப்படுகின்றன. வனப் பாதுகாப்புத் திணைக்களம் தற்போது பைனஸ் காடுகளை அகற்றி உள்நாட்டு தாவர இனங்களை பயிரிடுவதன் மூலம் காடுகளை மீளமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. தற்போது திணைக்களத்திற்கு சொந்தமான சுமார் 1000 ஹெக்டயர் பைனஸ் வனத் தோட்டங்கள் அகன்ற இலை காடுகளாக மாற்றப்பட்டுள்ளன. மரங்களை வெட்டும் செயற்பாடானது 2021 இல் ஆரம்பித்து 2028 இல் நிறைவடைவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பொதுவாக பைனஸ் தோட்டங்கள் ஒரு ஹெக்டயருக்கு சுமார் 300-400 கன மீட்டர் மரத்தை உற்பத்தி செய்வதோடு அதன் சந்தைப் பெறுமதி ஒரு ஹெக்டயருக்கு 10 மில்லியன் ரூபாவாகும்.

எனவே வரவிருக்கும் ஆண்டில் புதுமையான பைனஸ் தயாரிப்புகளுடன் கவனம் செலுத்துவது சமூகத்திற்கும் பொருளாதார, பாதுகாப்பு, சுற்றுச்சூழல் நன்மைகளை அதிகரிக்கும். எனவே அரச மரக் கூட்டுத்தாபனத்தின் எதிர்காலக் கண்ணோட்டமாக, அறுவடை நெறிமுறைகள், பதப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு நுட்பங்கள், தரப்படுத்தல் விதிகள் மற்றும் தற்போதைய பொருளாதார நிலைமைகளுக்கு செலவு குறைந்த அறிவியல் வழியைப் பின்பற்றி தரம் வாய்ந்த புதுமையான நவீன தயாரிப்புகளை உற்பத்தி செய்வதில் நாங்கள் அதிக கவனம் செலுத்துகின்றோம்.

நன்றி நவிழல்

கோவிட் 19 தொற்றின் உயிர் அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல், அதிக ஆபத்தான சூழலில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தலைவர், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனமுவந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நிறுவனத்தின் வெற்றிகரமான முன்னேற்றத்திற்கு அடித்தளமிட்ட எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு எனது இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு மரம் மற்றும் மரம் சார்ந்த தயாரிப்புகளின் முன்னணி வளங்குநர்கள் என்ற வகையில் எமக்கு விசுவாசமாக இருக்கும் அவர்களுக்கு எங்கள் திறனுக்கு ஏற்ற வகையில் தனித்துவமான தயாரிப்புகளை வழங்குவதற்கு எப்போதும் தயாராக இருக்கின்றோம்.

இறுதியாக, சவாலான கடினமான காலகட்டமாகிய 2020ம் ஆண்டில் எமது இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைய எமக்கு அளவற்ற ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளித்த வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு கௌரவ அமைச்சர், அவர்களின் இராஜாங்க அமைச்சர், அமைச்சரின் செயலாளர் மற்றும் வனப் பாதுகாப்பு அதிபதி மற்றும் வனத் திணைக்களத்தின் ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

பேரா. என்.டி. ருவன்பத்திரண,
பொது முகாமையாளர்,
அரச மரக் கூட்டுத்தாபனம்.



எமது பொறுப்புக்கள்

→ காடுகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அம்மரங்களை அரிமரங்களாகவும் முடிவுப் பொருட்களாகவும் மாற்றுதல், மரக் குற்றிகள், அரிமரங்கள், முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் இக்காரியங்களுக்கான காட்டுப் பாதைகளை அமைத்தல்

→ மரக்குற்றிகளாக்கும் அலகுகள், அரியும் ஆலைகள், எண்ணெய் இடுதல் மற்றும் பாதுகாத்தல் பொறித்தொகுதிகள், அரிமரங்களை உலரவைத்தல் மற்றும் உலரவைக்கும் சூளைகள் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அமைத்தல், செயற்படுத்துதல்

→ அரிமர விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்லல்.

→ அரிமர உப பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல்

→ அரிமரங்களை இறக்குமதி செய்தல்

→ புதிய காடுகளை நடும் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், மீள் நடுகைகளை மேற்கொள்ளல், காடு மற்றும் காட்டு நடுகைகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்

→ விவசாய உற்பத்திகள்

→ அரிமரம் தொடர்பான முடிவுப் பொருட்கள் மற்றும் பகுதியளவு முடிவுப் பொருட்கள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்

→ தனியார் காணிகளிலிருந்து மரங்களைக் கொள்வனவு செய்தல்

→ காடு சார்ந்த உற்பத்திகளைப் பதனஞ் செய்தல்

→ பிரம்புகளை இறக்குமதி செய்தல்

→ மாதிரிகளைப் பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிமரங்களை இனங் காணல் மற்றும் அரிமரச் சான்றிதழ்களை வழங்கல்

→ அரிமரக் கைத்தொழில் சார்ந்த விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், சான்றிதழ்கள் வழங்குதல், சுற்றாடல் தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்

→ கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் முழுப் பயனையும் பெற்றுக் கொள்வதற்காகத் திட்டமிடல் மற்றும் அதற்காக முதலீடு செய்தல்



எமது வர்த்தகப் பெறுமானங்கள்

→ சூழல் நேயம் மிகுந்த மற்றும் வர்த்தகரீ தியாக வெற்றிகரமாகச் செயற்படக்கூடிய பொதுத்துறை நிறுவனமொன்றாக எமது நிலைப்பாட்டைப் பேணுவது எமது முதன்மையான பொறுப்பு என இனங்கண்டுள்ளோம்.

→ சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலைப் பாதுகாப்பதற்கு காடுகள் மற்றும் அரிமரங்களை அகற்றும் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

→ எமது வாடிக்கையாளர்களுடன் நேர்மையான வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்கும் அனைத்து இலங்கையருக்கும் பெறுமதிகளை உருவாக்குதல் எமது நிலைப்பாட்டின் முதன்மைக் காரணிஎன நாம் எற்றுக் கொண்டுள்ளோம்.

→ திறன்களின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி, தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றால் எமது ஊழியர்களின் வினைத்திறன் மட்டத்தை மேம்படுத்துவதற்கு செயற்படுகின்றோம்.

→ வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதற்கு எமது எல்லா அலுவலகங்களிலும் அவர்களை முதன்மைப்படுத்தி செயற்படுகின்றோம்.

→ அனைத்து செயற்பாடுகளின் போதும் மற்றும் சேவைகளை வழங்கும் போதும் தனிப்பட்ட விசுவாசத்தினை உயர் மட்டத்தில் பேணுவதாக உறுதிப்படுத்துகின்றோம்.

→ எதிர்கால சந்ததியினரின் பெறுமதிமிக்க தேசிய மரபுரிமைகளான சூழல் மற்றும் வன வளங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்கு விதிகளையும் சமூக விழுமியங்களையும் பின்பற்றுகின்றோம்.

பணிப்பாளர் சபை – 2020

திரு. உதய சீ.வலிசிங்ஹ
தலைவர்
அரச மரக் கூட்டுத்தாபனம்

திருமதி. பீ.என்.கமகே
பணிப்பாளர்(திறைசேரியின் பிரதநிதி

திரு. பாதுகாப்பு. ஏ. சீ.வேரகொட
பணிப்பாளர்
(வன புர்தகுர்ப்ப பணிப்பாளர் நாயகம்)

திரு. பீ.கே. பிரசன்ன
பணிப்பாளர்

திரு. பீ.டீ.பிரீதி குணதிலக்க
பணிப்பாளர்

திரு.எச்.கே.எம்.ஜே.எச்.குமாரசிங்க
பணிப்பாளர்

திரு. பி.எ. தர்மரத்ண
பணிப்பாளர்

திருமதி. எம்.ஜீ.திலானி ஷாரிகா
கல்விச் சபை செயலாளர்



சிரேஷ்ட முகாமைத்துவக் குழு- 2020

திரு. ஜீ.டீ.எஸ்.குமாரசிங்க
பிரதி பொது முகாமையாளர் - (நிதி)

திரு. எம்.ஏ.சீ.என். சமரசிங்க
பிரதி பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்

திரு. எம்.சீ. தேவேந்திர
பிரதி பொது முகாமையாளர் - (செயற்பாடு)

திரு. டபிள்யூ.பீ. சமந்த
பிரதி. போது முகாமையாளர்.- (சந்தைப்படுத்தல்)

திரு. ஜீ.ஜீ. திசரகமகே.
பிரதி பொது முகாமையாளர் (பதில்) (பொறியியல் மற்றும் உற்பத்தி)

பைனஸ் பயிர்கள் பெரும்பாலும் செங்குத்தான சரிவுகளிலேயே நடப்படுகின்றன.மண்ணரிப்பைக் குறைப்பது இதன் நோக்கமாகும். தற்போது வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் 30 பாகைக்கு மேல் சாய்வான நிலப்பரப்பில் மற்றும் 5,000 அடிக்கு மேற்பட்ட உயரத்தில் உள்ள மண் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு பைனஸ் மரங்கள் நடப்பட்டுள்ளன.

இலங்கையில் தற்போது சுமார் 16,000 ஹெக்டேயர் அளவு நிலப்பரப்பில் பைனஸ் பயிரிடப்பட்டுள்ளது. அவற்றில் 94% இற்கும் அதிகமானவற்றில் *Pinus caribaea* எய சழனெரசநளெளை என்ற இனம் நடப்பட்டுள்ளது. மேலும் 700 ஏக்கர்களில் *Pinus patula* என்ற இனம் பயிரடப்பட்டுள்ளதுடன் மேற்கூறப்பட்ட பிரதான வகையுடன் *Pinus insularis* என்ற வகை மிகவும் குறைந்த ஈரப்பதன் உள்ள இடங்களில் கலப்பு பயிரினங்களாக நடப்பட்டுள்ளன. இப்பைனஸ் பயிர்ச்செய்கை இரத்தினபுரி, கண்டி, பதுளை, நுவரெலியா, மாத்தளை, காலி, களுத்துறை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ளன. இப்பைனஸ் பயிர்செய்கையில் 60% உரித்து வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு உரித்தாக உள்ளதுடன் 38% உரித்து காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமானதாகும்.

பைனஸ் பயிர்ச்செய்கையின் அனைத்து உரித்தினையும் கருத்திற் கொள்ளாமல் வன பாதுகாப்பு திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு பேணப்படுகின்றது. பைனஸ் பயிர்ச்செய்கை மூன்று சுழற்சிகளின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது. அதாவது, உணர்திறன் பகுதிகளில் பாதுகாப்பு பணி சுழற்சியும் உணர்திறன் அல்லாத பகுதிகளில் மர உற்பத்தி வேலை சுற்றும் ரெக்சின் வேலை சுழற்சி செயலிலும் செயற்படுத்தப்படுகின்றது.

ஆண்டறிக்கை

அரசு மரக் கூட்டுத்தாபனம்

- 2020 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபை மீளாய்வு
- எமது மேவுகை வலயங்கள்
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை - 2020

2020 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபை மீளாய்வு

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் முன்வைப்பதில் பணிப்பாளர் சபையாக நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

கண்ணோட்டம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 1968 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அரசாங்கத்திற்குரிய வர்த்தக நிறுவனமொன்றாகும். 1957 இன் 49 ஆம் இலக்க கொண்ட அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ கூட்டிணைக்கப்பட்டது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் பத்தரமுல்லை, "சம்பத்பாய" வளாகத்தில் அமைந்துள்ளதுடன், அதன் பிராந்திய அலுவலகங்கள் நாடளாவிய ரீதியிலும் அமைந்துள்ளன.

முதன்மைச் செயற்பாடு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தனது வருமானம் முக்கியமாக அரிமரம் மற்றும் மரத்திலான உற்பத்திகளை விற்பனை செய்வதன் மூலம் ஈட்டுகின்றது.

வர்த்தக மீளாய்வு

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, 2020 ஆம் ஆண்டானது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வெற்றியை நெருங்கிய வருடமொன்றாகும். நம்பிக்கை மற்றும் சிறந்த தரத்தில் கட்டியெழுப்பப்பட்ட வரலாறொன்னு மற்றும் நம்பிக்கையின் பாரம்பரியத்துடன் சிறப்பாக விளங்குகின்ற, குழு மனப்பாங்குடனான பிரபலமான பாரிய வர்த்தக நிறுவனமொன்றாகும். அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 1968 இன் தொடக்கத்திலிருந்தே கட்டியெழுப்பிய நம்பிக்கையுடன் கூடிய எமது நாடு ஏற்றுக் கொண்ட தரமான அரிமர வழங்குனராக தளராத பாதையொன்றில் பயணிக்கும் வர்த்தகமொன்றாகும்.

கொவிட் 19 தொற்று 2020 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் அநேகமான வியாபாரங்கள் தொடர்பில் பாதகமான தாக்கமொன்றை ஏற்படுத்தியுள்ளதுடன் அதற்கு பின்னரான காலப்பகுதியில் கலப்பு செயலாற்றலொன்றை சுட்டிக் காட்டியது. அதனக் பிரகாரம் 2020 ஆம் நிதியாண்டில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு பாரியளவில் சவால்களாக இருந்ததுடன் அதன் தாக்கம் இவ்வாண்டிலும் தொடர்ச்சியாக முகங்கொடுக்க கொடுக்க வேண்டியேற்பட்டது.

கொவிட் 19 தொற்று பரவலை தவிர்க்கும் நோக்கில் செயற்படுத்தப்பட்ட நாட்ட முடக்குதல் உட்பட அனைத்து வகைகளிலும் செயற்பாடுகள் மூலம் வியாபாரம் தொடர்பில் ஏற்பட்ட தாக்கம் நாட்டின் பொருளாதார செயற்பாடுகளுக்கு அதிகளவில் பாதிப்பேற்பட்டுள்ளதால் 2020 ஆம் ஆண்டின் போது இலங்கையின் பொருளாதாரம் 3.6 சவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இது சராசரி தனிப் பயன்பாட்டிற்கு உட்பட மரம் உட்பட வேறு கைத்தொழில்களுக்கும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெறுமதியை அதிகரிப்பதற்காக தொகுதி சார்ந்த வளர்ச்சியில் கிரயத்தை உச்சப்படுத்தலுடன் தொடர்பான வளர்ச்சி தொடர்பில் கூடிய கவனத்தை




செலுத்துதல், சிறந்த முகாமை உட்பட 2019 ஆம் ஆண்டில் முகங்கொடுக்க வேண்டி இருந்த வியாபார சிக்கல்களுக்காக தீர்வு தேடும் போது நாம் பெற்றுக்கொண்ட அனுபவம் மற்றும் அறிவினை பயன்படுத்தி கொவிட் - 19 ஊடாக உருவாகிய சவால்களை கருத்திற் கொள்ளாமல் மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டில் பலமான செயலாற்றலொன்றை அடைந்து கொள்வதற்கு அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு முடியுமாக இருந்தது

நிதிசார் செயலாற்றுகை

கொவிட் - 19 தாக்கம், வாடிக்கையாளர் நடத்தை அடிப்படையில் எமது சில உற்பத்திப் பொருட்களின் செயற்பாடு தொடர்பில் கருத்திற் கொள்ள வேண்டிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் 2020 ஆம் ஆண்டின் வருமானமாக ரூபா 3,982 மில்லியன் உழைத்திருந்ததுடன் அது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 0.71 சதவீதமான பின்னடைவொன்றாகும். அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் 2020 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட மொத்த இலாபம் ரூபா 1,746 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 08மூ சத வீத குறைவைக் காட்டுகின்றது. தொற்று நோய் ஊடாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, நாட்டை முடக்கும் சட்டங்கள், பயணக் கட்டுப்பாடு, சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் தாக்கம் என்பன அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றல் தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்தன.

செயலாற்றுகை	2020 ரூபா மில்லியன	2019 ரூபா மில்லியன்
விற்பனைப் புரள்வு	3,982	4282
மொத்த இலாபம்	1746	1891
செயற்படு இலாபம்	369	277
செயற்பாடற்ற இலாபம்	200	236
வரி மற்றும் அறவீடுகளுக்கு முன்னரான தேறிய இலாபம்	570	513



அரச மரக் கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டில் ரூபா 570 மில்லியனை வரி முன்னரான தேறிய இலாபமாக அறிக்கையிட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11% அதிகரிப்பொன்றாகும். பெறுமதியை அதிகரிப்பதற்கு கிரய உச்சப்படுத்தல் தொகுதி முறைக்கு கூடிய கவனம் வளங்களை செயற்திறனாக பயன்படுத்தியமை இந்த அதிகரிப்பினை பெற்றுக்கொள்வதற்கு கூடிய பங்களிப்பொன்றை வழங்கியது.

இலங்கையில் வேலையில்லா பிரச்சினையின் உயர் வீதத்தினைக் குறைப்பதற்கு அரசாங்கத்திற்கு உறுதுணையாக அதிகமான வேலை வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் சந்தைக்கு தரமான உற்பத்திகளை வழங்குதல் தமது பொறுப்பு என்பதை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தனது பொறுப்பாக கருதுகின்றது. 2020 ஆம் ஆண்டில் பொருளாதார வீழ்சசியின் கீழும் கூட கூட்டுத்தாபன ஊழியர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி ஊழியர் கிரயமாக ரூபா 1,640 மில்லியனை செலவழித்துள்ளது. 20202 ஆம் ஆண்டில் மொத்த ஊழியர் எண்ணிக்கை 1708 ஆகவும் 2019 ஆம் ஆண்டில் 1803 ஆக இருந்தனர்

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் மீதான நலன்கள் மற்றம் உரித்து அடிப்படையல் இலாபம் பின்வருமாறு காணப்படுகின்றது.

செயலாற்றல்	சொத்துக்களின் மீது திரும்பல்	பங்கு மீதி நலன்கள்
2020	6%	8%
2019	4.4%	5.7%

2019 ஆம் ஆண்டின் போது 4.4% ஆன வரி கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் சராசரி சொத்துக்கள் மீதான நலன்கள் 2020 ஆம் ஆண்டின் போது 0.6% சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது 5.7% ஆன

சராசரி பங்கின் மீதான நலன்கள் (ROE) 2020 ஆம் ஆண்டின் போது 8மூ வரை அதிகரித்திருந்தது. கொவிட் 19 தொற்று உலகலாவிய தொற்றுநோய் மத்தியிலும் மீளாய்வாண்டில் அரச வருமானத்திற்கு கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு ரூபா 1,746 மில்லியனாக இருந்ததுடன் திறைசேக்கு செலுத்திய ரூபா 511 மில்லியனான வரியும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி

செயற்பாட்டு செயன்முறையை சூழல் நேயமிக்க முறைமைகள் ஊடாக மேற்கொண்டு உயர் உற்பத்தி மட்டத்தினைப் பேணுதல் நிறுவனத்தின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், இலாபத்தினை அதிகரித்துக் கொள்வதற்கும், நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளி அங்கங்களின் சிறந்த நிலைப்பாட்டிற்கும் பிழைப்பிற்கும் இலாபத்திற்கும் முக்கியமானது என்பது எமது கடும் நம்பிக்கையாகும்.

அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிற்கு இணங்கி அவற்றுக்கு இணங்க செயற்படல், வேலைத்தள வகைப்படுத்தல் சரிப்பார்த்தற் பட்டியலைத் தயாரித்தல், விஞ்ஞான முறையில் அரிமரங்களை வெட்டுதல், முறையான அரிமரப் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு உத்திகள், எல்லா இயந்தி உபகரணங்களின் முறையான ஸ்தாபிப்பு, நிறுவுகை மற்றும் பராமரிப்பு, ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் அபிவிருத்திச் செயன்முறைகள் என்பனவற்றை குறுங்கால மற்றும் நெடுங்கால குறிக்கோள்களை அடைவதற்கு நிலைபேறான முறையில் நிறைவேற்றுவதற்கு முடியுமாக இருந்தது. உண்மையாகவே அரச மரக் கூட்டுத்தாபனம் இலங்கையில் நிலைறோன வன முகாமைத்துவத்திற்காக பங்களிப்பை வழங்கும் பிரதான நிறுவனமொன்றாகும்.

- அதற்கு மேலதிகமாக தொழிற்சாலையின் போட்டியாளர்களை விட போட்டியுடனான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள கீழ்க்காணும் உத்திகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஆலோசனை செய்துள்ளது.
- வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் திணைக்களத்தினால் விடுவிக்கப்படுகின்ற வனச்செய்கை மின்சார அரிமர பிரித்தெடுப்புக்காக நடவடிக்கை எடுத்தல்.
- சந்தைக்காக மரக்குற்றிகள், புகையிரதத் திணைக்களத்துக்காக சில்பர்கள், மின்சார சபைக்காக மின்கம்பங்கள் மற்றும் வனசீவராசிகள் திணைக்களத்துக்காக யானைவேலிக் கம்பங்கள் போன்றே வாடிக்கையாளரின் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக கிழிக்கப்பட்ட அரிமரங்களை உற்பத்தி செய்தல்.
- வணிக பெறுமதிமிக்க அரிமரங்கள் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் தனியார் காணிகளிலிருந்தும் கொள்வனவு செய்தல்.
- நன்கொடை மற்றும் வன மோசடி அரிமரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- வனச்செய்கை நிகழ்ச்சிகளுக்காக உற்சாகத்துடன் பங்குபற்றல். (செயலாற்றுதல் மற்றும் பங்குபற்றுதல்)
- புகையிரத சில்பர்கனை இறக்குமதி செய்வதற்கு பெறுமதியை சேர்ப்பதன் பின்னர் மீண்டும் ஏற்றுமதி செய்தல்.

அரச காடுகளிலிருந்து அரிமரங்களை வெட்டுதல்

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்ட முதிர்ந்த வனப் பிரதேசங்களின் அளவு குறைவடைதல் அண்மைக் காலமாக நாம் முகங்கொடுத்து வரும் பிரதான சவாலாகும். வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் வருடாந்தம் விடுவிக்கப்பட்ட வனப் பிரதேசங்களின் அளவு திரைசேரியின் இணக்கப்பாட்டுடன் மேலதிக அளவினை விடுவித்துக் கொள்வதும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மூலம் சில்பர் மற்றும் மின் பரிமாற்றக் கம்பங்களுக்குத் தேவையான மரங்களைப் பெற்றுக் கொள்வதும், இலங்கை பேரூந்து மற்றும் காணி புனர் நிர்மாண ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளிலிருந்து மரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் வன முகாமைத்துவத் பிரகாரம் வெட்டுவதற்காக தேக்கு, பைனஸ், யூக்கலிப்டஸ் போன்ற காட்டு மரங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மரங்களை வெட்டுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ள வன முகாமைத்துவப் பகுதிகள் கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

	முற்றாக வெட்டுதல் (ஹெ.)		மெல்லியதாக்குதல் (ஹெ.)	
மர இனம்	2020	2019	2020	2019
தேக்கு	692.0	638.0	132.0	128.0
யூகலிப்டஸ்	51.0	119.5	296.0	495.0
பைனஸ்	109.4	86.2	0.0	0.0
காயா	0.0	0.0	24.0	49.0
எக்கேஷியா	8.0	69.6	0.0	0.0

மரக்குற்றிகளை அரிமரத் துண்டங்களாக்குதல்

2020 ஆம் ஆண்டின் அரி மர உற்பத்தி 3,387 கன மீற்றருக்கு ஒப்பாக 2019 ஆண்டில் கிழிக்கப்பட்ட 4,389 கன மீற்றர் பலகை ஆலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2,279 கனமீற்றர் நாடு பூராகவும் அமைந்துள்ள விற்பனை களஞ்சியங்களின் மூலம் அரிமரத்துண்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மின் கம்பங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளைப் பரிகரித்தல்

மீளாய்வாண்டின் போது 38,380 36,701 சிலிப்பர் கட்டைகள், 9,117 யானை வேலிக் கம்பங்கள் என்பன அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஹல்தமுல்லை, கெப்பெட்டிபொல, பூஸ்ஸ ஆகிய பயன்படு நிலையங்களில் பயன்படுத்தப்பட்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிலிப்பர் உற்பத்தி 51% ஆல் அதிகரித்திருந்துடன் வனசவராசிகள் திணைக்களம் மற்றும் மின்சார சபை என்பவற்றின் கேள்வி குறைவடைந்தமை அடிப்படையில் மின் கம்பங்கள், யானை வேலிக் கம்பங்கள் உற்பத்தி முன்னைய ஆண்டில் போதியளவிலான 8660 மற்றும் 11837 ஆன அலகுகள் ஒப்பாக கருத்திற் கொள்ள வேண்டிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

தளபாட உற்பத்தி

அரசாங்க மரக கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, பூஸ்ஸ, ஹல்தமுல்லை ஆகிய தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து ரூபா 237 மில்லியன் (வரியுடன்) பெறுமதியான தளபாடங்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை, கண்டி, இரத்தினபுரி, தலல்ல, பூஸ்ஸ, அம்பாறை, பண்டாரவல மற்றும் பத்தரமுல்ல ஆகிய அரசா மரக் கூட்டுத்தாபனத்தின் தளபாட காட்சியறைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி, விற்பனை மற்றும் வருமானம்

		உற்பத்தி அளவு		விற்பனை அளவு		மொத்த வருவாய் ரூபா மில்லியன்	
		2020	**2019**	**2020**	**2019**	**2020**	**2019**
குற்றிகள்	க.மீ	106,609	123,206	103955	113,922	3,299	3,445
மரத்துண்டங்கள்	க.மீ	3,387	4,774	2279	3,459	222	307.9
சிலிப்பர் கட்டைகள்	அலகு	38,380	36,701	36,552	49,076	371.1	530.5
மின்கம்பங்கள்	அலகு	-	8,660	2,287	6,529	24	63.9
யானை வேலிக் கம்பங்கள்	அலகு	9,171	11,837	9,347	18,208	48	73.4
வேலிக் கம்பங்கள்	அலகு	67,589	93,783	76,761	97,185	9.3	15.5
விறகு	க.மீ	82,856	107,914	60,171	92,637	39.5	71.9
வேலிக் கம்பங்கள்	அலகு	105,453	99,047	117,430	125,928	18.7	18.3

அடைவுகளுடனான இலக்குகளைக் கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்


அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவக் குழுவின் மூலம் நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகள் வருட ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட நோக்கங்களுக்கு அமைவானதாகும் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் மற்றும் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வருட இறுதியில் அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதனடிப்படையில் முன்னேற்றத்தினை கண்காணித்தல் உள்ளிட்ட ஒவ்வொரு பிரிவுடனும் தொடர்பான மற்றும் ஏற்படக்கூடிய அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக தலைவரின் தலைமையில் சகல பிரதேச முகாமையாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் சிரே'ட முகாமையாளர்களின் பங்குபற்றுதலுடன் மாதாந்த பிரதேச முகாமையாளர்களின் கூட்டமொன்று அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தின் மூலம் நடாத்தப்படுகின்றது.

இலங்கை தற்பொழுது கொவிட் 19 தொற்றாளர்களின் அதிகரிப்பினையும் எதிர்கொண்டு நிற்கின்றது. தொற்று நோயின் எதிர்மறையான தாக்கங்களிலிருந்து ஒருபடி மேலே சென்று எமது தேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதற்காக நிறுவனம் எனும் அடிப்படையில் எம்மால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளின் அடிப்படையில் எமது நிறுவனத்தின் நோக்கங்கள் முன்னைய வருடங்களை விட பொருத்தமாக அமைந்துள்ளன. எமது சமூகம் சார்ந்த பொறுப்புக்களை நாம் உணர்ந்துகொண்டுள்ள அதேவேளை எமது பங்குதாரர்களுக்கு உயர் பெறுமதியை வழங்கி அவர்களுடன் சேர்ந்து முன்னேறிச் செல்லும் வகையில் நாம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றோம்.

பணிப்பாளர் குழு சார்பாக ஒப்பமிட்டவர்

உதய சீ வலிசிங்க
தலைவர்
அரச மரக் கூட்டுத்தாபனம்

எமது மேவுகை வலயங்கள்





கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

கணக்காய்வுமற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் - 2020

திருமதி பீ.என். கமகே - தலைவர்
திரு. எச்.கே.ஜே..எச் குமாரசிங்ஹ - உறுப்பினர்
திரு. ஜீ.கே.பிரசன்ன - உறுப்பினர்

2020 ஆம் ஆண்டின் போதுகவனம் செலுத்தப்பட்ட பிரிவு

நிதிஅறிக்கையிடல
உள்ளகககணக்காய்வு, இடர் மற்றும் கட்டுப்பாடு
வேளிவாரி கணக்காய்வு
இணக்கப்பாடு

குழுவின் நோக்கங்கள்

நிதி அறிக்கையிடல் செயற்பாட்டு மீளாய்வு செய்வதினூடாக பணிப்பாளர் சபையின் கண்காணிப்பு பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு அடிப்படையாகக் கொண்ட நிதிக் கூற்றுக்களின் சரியானதெனவும் சட்டஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டிற்கு இணங்குவதை உறுதிபடுத்துவதற்காக பின்பற்றப்படுகின்ற செயற்பாடு, உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை மற்றும் ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு, உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு மற்றும் சகல தரப்பினர்களினதும் தேவைப்பாடுகளை பாதுகாக்கும் நோக்கில் வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் சுயாதீனம் மற்றும் செயலாற்றல் மீளாய்வு செய்தல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வுச் செயன்முறைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் சிறந்த உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறையினைப் பேணுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டது.

வியாபார சூழலில் உருவாகிவரும் புதியபோக்குகளுடன் பயணிப்பது மற்றும் குழுவின் பொறுப்புக்கள் உரியநேரத்திலும் உரியமுறையிலும் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதை குறிப்பிட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்ச்சியாக பராமரிக்கப்படுகின்றது.

பிரதான பொறுப்புக்கள்

- நிதி அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் வழங்கும் போது பின்பற்றப்படுகின்ற கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வெளிப்படுத்தப்பட்டவைகளை போதியளவில் உள்ளதாக உறுதிப்படுத்தல்.
- கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை பாதுகாத்தலை உறுதிப்படுத்துவுதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு

முறைமையினதும் இடர் முகாமைத்துவத்தினதும் செயற்பாடுகள் போதியளவிலும் வினைத்திறனாகவும் கண்காணிக்கப்படல் மற்றும் மீளாய்வு செய்தல்

- கணக்காய்வுக் குழு அங்கீகரிக்கப்பட்ட மேவுகை திட்டத்தை செயற்படுத்துதல் உட்பட உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்
- வெளிக் கணக்காய்வாளரின் சுயாதீனம் மற்றும் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்
- வருடாந்தநிதிக்கூற்றுக்கள் கணக்காய்வில் எழுந்த கண்டுபிடிப்புக்களை கருத்திற் கொள்ளல்
- திரட்டிய அறிக்கை, கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் இடைக்கால அறிக்கைகளை அங்கீகரிப்பதற்கு சபைக்கு பரிந்துரைத்தல்

2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

கணக்காய்வுக் குழு 2020 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தியது.

01. நிதி அறிக்கை

பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்வதற்கு முன், குழு இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்து முகமைத்துவுத்துடன் கலந்துரையாடியது. நிதிகூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் தகவல் அமைப்புகளில் தொடர்புடைய கட்டுப்பாடுகளின் செயல்திறன் மற்றும் ஆபத்து குறித்து குழுவினால் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டது. கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக சாத்தியமான நிதி தாக்கத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, வணிகத்தின் நம்பகத்தன்மையை குழு தவறாமல் மதிப்பீடு செய்தது. மேலும், ஆண்டு முழுவதும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் நிதியவழங்கல் மீளாய்வு செய்யப்படுகின்றது.

02. இணக்கப்பாடு

ஒழுங்குபடுத்தல் மற்றும் சட்ட இணக்கப்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக முகாமையினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட ரீதியான வரி இணக்க கூற்று உட்பட ஒழுங்குபடுத்தல் கூற்று கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது.

03. உள்ளக கணக்காய்வு ஆபத்து மற்றும் கட்டுப்பாடு

கூட்டுத்தாபனத்தைப் பாதிக்கும் அனைத்துவகையான குறிப்பிடத்தக்க இடர்களையும் கண்டறிந்து குறைப்பதற்கு பயனுள்ள தந்திரோபாய உத்திகள் செயற்படுத்தப்படுவதாக முகாமைத்துவத்திடம் இருந்து தேவையான உத்தரவாதங்களைப் பெறுவதில் குழு தொடர்ந்து கவனம் செலுத்தியுள்ளது. இந்த ஆண்டில், ஆபத்துக்களை அடையாளம் காணுதல், மதிப்பீடு செய்தல், குறைத்தல் மற்றும் கட்டுப்பாட்டு பலவீனங்களுக்காக கூட்டுத்தாபனம் பின்பற்றும் பிரதான இடர் முகாமைத்துவ செயற்பாடு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்துடன் குழு கலந்துரையாடலை மேற்கொண்டது. குழுவானது உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமான தன்மை மற்றும் செயலாற்றலை தொடர்ந்து மதிப்பாய்வு செய்தது. நடத்தப்பட்ட உள்ளக கணக்காய்வு பற்றிய நாளதுவரையாக்களும் இதில் அடங்கும். மேலும், இந்த செயல் முறையானது கூட்டுத்தாபனத்தின் நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்குவதையும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளுடன் இணங்குவதையும் உள்ளடக்கியது. கூட்டுத்தாபனத்திற்காக உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை அவ்வப்போது மீளாய்வு செய்ததுடன், தொழிற்பாட்டுச் சூழலுக்கும் வணிகத் தேவைகளுக்கும் ஏற்றவாறு மாற்றங்களைச் செய்தது.


04. வெளிவாரிக் கணக்காய்வு


குழுவானது வெளிவாரிக் கணக்காய்வாளர்களைத் தொடர்ந்து சந்தித்து அவர்களின் சுதந்திரம் விடயப்பரப்பு மற்றும் செயற்பாடுகளை அவதானித்தது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வெளிவாரி கணக்காய்வாளருடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் கணக்காய்வைத் திட்டமிடல் மற்றும் விடயப் பரப்பினை திட்டமிடும் கட்டத்தின் போது கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்தல். நிதிக் கூற்றுக்களை அங்கீகரிக்கும் முன்னர் கணக்காய்வினை பூர்த்தி செய்தல் தொடர்பாக கணக்காய்வு அறிக்கை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டினை மேம்படுத்த வேண்டிய பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்தின் பிரகாரம் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்த வேண்டிய ஏனைய விடயங்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது. மேலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் ஏதேனும் குறிப்பிட்ட விடயங்களை கலந்துரையாடுவதற்காகவும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. கணக்காய்வு குழுவினால் உயர் முகாமைத்துவ தகவலைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, வெளிவாரி கணக்காய்வாளர்களின் செயலாற்றலை மீளாய்வு செய்ததுடன் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் வெளிவாரி கணக்காய்வாளர்களுடனும் முகாமையுடனும் கலந்துரையாடப்பட்டன.

பியன்கா எஸ் கமகே.
தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு


வியாபார பொழிப்பு


வருவாய் வளர்ச்சி போக்கு பகுப்பாய்வு







இலாப அதிகரிப்பு போக்கு பகுப்பாய்வு










உற்பத்தி வளர்ச்சி போக்கு பகுப்பாய்வு)














மூலதனச் செலவினம் - 2020

விபரம் (ரூபா 2 மில்லியனுக்கு மேல்)	ரூபா
வெளிப்புற லொறி - மாற்றுறை பகுதி	19,800,000
03 இரட்டை கேப் வண்டிகள் - தலைமை அலுவலகம்	27,750,000
உற்பத்தி பிராந்திய முகாமைத்துவ அலுவலகத்தை நிர்மாணித்தல் - யாழ்ப்பாணம் பிராந்தியம்	7,924,533
நீலக்கல் பிடித்தல் - தலைமை அலுவலகம்	4,375,980
அட்டவ மடி - கொழும்பு பிராந்தியம்	3,411,081
கொங்கிரீட் வீதி அமைத்தல் - இரத்தினபுரி பிராந்தியம்	2,649,199
கொங்கிரீட் வீதி அமைத்தல் - கெப்பெட்டிபொல	2,727,456
கொங்கிரீட் வீதி அமைத்தல் - அனுராதபுரம் பிராந்தியம்	2,548,904

முதலீடுகள்

	2020.12.31	2019.12.31
அரசு நிறுவனங்களின் சந்தாவிலக்கு மிகை நிதிய கணக்குகள்	-	486,568,114
அரச பட்டி மற்றும் முதலீடு வங்கி	219,691,174	203,624,016
காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்	500,000	500,000
மக்கள் வங்கி	785,754,782	526,885,770
இலங்கை வங்கி	1,486,003,969	861,011,950


		2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020
வருடத்திற்கான முழு வருமானம்	ரூபா '000	3,103,744	3,563,390	3,213,644	3,756,482	4,132,052	4,522,238	4,630,718	4,457,024	4,608,413	4,372,033
வருடத்திற்கான மொத்த இலாபம்	ரூபா '000	1,237,640	1,546,107	1,197,518	1,453,450	1,757,115	2,045,090	2,075,950	1,964,647	1,890,812	1,745,766
வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னைய தேறிய இலாபம்	ரூபா '000	603,499	801,681	382,337	427,222	768,699	659,732	966,804	672,433	512,947	569,521
மொத்த ஊழியர் கிரயம்	ரூபா '000	953,498	1,065,052	1,117,036	1,254,516	1,449,749	1,789,572	1,572,775	1,553,598	1,584,418	1,640,020
வருடாந்த மூலதனச் செலவினங்கள்	ரூபா '000	180,546	162,509	332,870	115,132	244,929	113,675	94,637	116,034	319,485	104,712
ஆண்டின் இறுதியில் நடைமுறையல்லாத சொத்துக்கள்	ரூபா '000	1,739,893	1,479,880	1,658,535	1,654,908	1,743,580	1,732,640	1,894,597	1,978,855	2,581,165	1,966,637
ஆண்டின் இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள்	ரூபா '000	2,177,892	2,929,185	3,153,777	4,004,860	4,115,259	3,652,116	4,423,105	4,541,610	4,640,889	5,319,557
ஆண்டின் இறுதியில் நடைமுறைப் பொறுப்புக்கள்	ரூபா '000	497,229	804,102	1,050,258	1,591,991	1,480,966	897,087	1,234,716	1,047,668	967,481	985,365
ஆண்டின் இறுதியில் நடைமுறையல்லாத பொறுப்புக்கள்	ரூபா '000	399,953	409,030	384,831	484,649	424,854	499,373	852,292	812,441	714,022	836,197
வருட இறுதியில் உரிமையாண்மை	ரூபா '000	3,020,602	3,195,933	3,377,223	3,583,129	3,953,019	3,988,297	4,230,694	4,660,357	5,540,551	5,464,633
திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்பு	ரூபா '000	75,000	600,000	50,000	25,000	50,000	175,000	100,000	100,000	50,000	511,026
வருட இறுதியில் ஊழியர் எண்ணிக்கை	எண்ணிக்கை	2,267	2,187	2,139	2,186	2,145	2,125	2,083	2,001	1,803	1,708
வருட இறுதியில் மேலதிக நிதிய முதலீடு செய்தல்	ரூபா '000	764,328	298,546	338,010	360,227	382,550	405,727	431,404	457,962	486,568	-
பிரதான செயலாற்றுகை சுட்டிகள்											
பங்குகளுக்கு மற்றும் வரிக்கு முன்னர் தேறிய இலாபம்	%	19.98	25.08	11.32	11.92	19.45	16.54	22.85	14.43	9.26	10.42
நிதி மாறுதல்களுக்கு முன்னர் தேறிய இலாபம் மற்றும் முழு சொத்துக்களுக்குமான வரி	%	15.40	18.18	7.94	7.55	13.12	12.25	15.30	10.31	7.10	7.82
நடைமுறை விகிதம்	தடவைகள்	4.38	3.64	3.00	2.52	2.78	4.07	3.58	4.33	4.80	5.40
உரிமையாண்மை : பொறுப்பு விகிதம்	தடவைகள்	0.77	0.72	0.70	0.63	0.67	0.74	0.67	0.71	0.77	0.75
சொத்துக்களின் மீதான திரும்பல்	%	7.68	3.73	3.78	3.64	6.31	0.66	3.84	6.59	12.19	8.00
மொத்த வருமான வளர்ச்சி	%	(14.17)	14.81	(9.81)	16.89	10.00	9.44	2.40	(3.75)	3.40	(5.13)

தசாப்தத்தின் தகவல்கள்


பைனஸ் மரத்தின் பண்புகள்

இலங்கை சூழல் ஒரு ஊசியிலை நிலைமைகளின் கீழ் வளரும் பைனஸ் செடிகளில் மரத்தின் அடர்த்தி 400 - 650 kgm^3 இடைப்பட்ட வீச்சில் உள்ளது பைனஸ் மரத்துடன் வேலை செய்யும் திறன் நல்ல தரத்தில் காணப்படுவதுடன் பைனஸ் மரத்தைப் பாதுகாப்பு மூலம் மரத்தை சிதைவடைவதையும் கிருமிகளின் தாக்கமின்றி நீண்டகாலம் வைத்திருக்கக்கூடிய இயலுமையும் காணப்படுகின்றது.

பைன்ஸ், இது ஒரு நடுநிலை மரமாக கருதப்படுவதால் லாம்மரத்தின் வழக்கமான விரிசல் மாடுலஸ் சங்கிலி (Modulus of Rupture) 60 Nmm^2 சராசரி மீள்தன்மை (Modulus of Elasticity) 8,000Nmm^2 அளவில் காணப்படுகின்றது. அமுக்க வலிமை Compression Parellal to Grain 40 Nmm^2 கருதப்பட்டது. அழுத்தத்தின் கீழ் பசை மிகவும் ஒட்டும் தன்மையில் காணப்படுகின்றது.







ஆண்டறிக்கை

அரசு மரக் கூட்டுத்தாபனம்

- ஆபத்து முகாமைத்துவம்
- நிறுவனத்தின் சமூக பொறுப்பு

இடர் முகாமைத்துவம்

நிலைபேறான வளர்ச்சிக்காக நிறுவன் நோக்கங்கள் மற்றும் இலங்குகளை அடைந்து கொள்ளும் நிரந்தர செயன் முன்னேற்றமொன்றை அடைந்து கொள்வதற்காக வியாபார மற்றும் நிதி ஆபத்து முகாமைத்துவம் முக்கியமான செயற்பாடொன்றாக உள்ளது. ஆபத்தை முழுமையாக இல்லாமல் ஆக்குவதற்கு முடியாத சாதகமொன்றாக உள்ளதுடன் செயற்பாடு தொடர்ச்சியாக மீளாய்வு மற்றும் தந்திரோபாயங்களை பின்பற்றி ஆபத்தை குறைப்பதற்கு கூட்டுத்தாபனம் உறுதியாக நிற்கின்றது. இந்த இலக்கை அடைந்துகொள்வதற்காக பல்வேறு வழிவகைகளில் தந்திரோபாயங்கள் பின்பற்றப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

ஆபத்தான சூழல்

கோவிட் - 19 தொற்றுக் காரணமாக 2020 ஆம் நிதியாண்டு மிகவும் சவாலான ஆண்டாக இருந்தது. எவ்வாறாயினும் செயற்திறனான தலைமைத்துவத்துடன் மரவளங்களை வினைத்திறனாக முகாமை செய்வதன் ஊடாக இந்த நிச்சயமற்ற நிலைமையை தவிர்த்து எமது அடிப்படை வியாபாரத்துடன் பலமாக வளர்ச்சியடையடையும் என்பது எமது நம்பிக்கையாகும். மேலும் பல்வகைப்படுத்தலான கைத்தொழிலில் இருத்தல் மற்றும் ஆபத்து முகாமை செயற்பாட்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு பலமாக இருந்ததுடன் பொருளாதார பின்னடைவுப் பின்னணியில் இருந்தபோதும் நிலையான முன்னேற்றமொன்றை பெற்றுக்கொண்டோம்.

ஆபத்து கட்டுப்பாடு

ஆபத்து முகாமைத்துவம் தொடர்பில் பணிப்பாளர் சபையின் முக்கிய பொறுப்பாக இருப்பதுடன் ஆபத்து முகாமை தொடர்பாக மேற்பார்வை பொறுப்புள்ள கணக்காய்வு குழுவொன்றினால் இதற்கான பணிப்பாளர் சபைக்கு தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. ஆபத்துக்களை இனங் காணுதல், மதிப்பீடு, முகாமைத்துவத்தை குறைத்தல் மற்றும் ஆபத்தைகண்காணித்தல் உட்பட உள்ளகக் கணக்காய்விற்கும் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அபாயங்களை அறிக்கையிடுவதற்கும் ஒவ்வொரு பிரிவுத் தலைவரும் பொறுப்பிற்கு கட்டுப்பாட்டவராக இருப்பார்.

ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு

அரசமரக் கூட்டுத்தாபனத்தின் ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு எல்லா வகையிலும் வியாபார மற்றும் நிதி ஆபத்து முறையாக இனங்காணுதல் பகுப்பாய்வு செய்தல் மற்றும் பொறுப்பேற்றல் என்பன உறுதிப்படுத்தப்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடு ஆபத்துகட்டுப்பாட்டு நடைமுறைக்கு வசதிகளை வழங்குவதுடன் வியாபாரத்தின் அனைத்துபிரிவிலும் ஆபத்து உருவாவதற்கு முன்னர் ஆபத்துக்களை இனங்காணக்கூடிய கலாசாரம் (Risk aware culture) இனை ஏற்படுத்தும் போதியளவு ஆபத்துக்களை மதிப்பீடுசெய்தல், இனங்காணுதல் மற்றும் குறைத்தல் என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

1. ஆபத்துக்களை இனங்காணுதல்

நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக உதவும் அல்லது தவிர்க்கும் தடைகளை ஏற்படுத்தும் ஆபத்துக்களை கண்டுபிடித்தல், இனங்காணுதல் மற்றும் விபரப்படுத்தலே ஆபத்தை இனங்காணுதலின் நோக்கமாகும். ஆபத்தை இனங்காணும் போது வியாபாரத்திற்குரிய



போதுமான சாத்தியக்கூறுகள், நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் முக்கியமாக இருப்பதுடன் நோக்கங்கள் ஒன்றோஅல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அளவில் தாக்கமளிக்கும் நிச்சயமற்ற தன்மையை இனங்காண்பதற்காக நிறுவனத்திற்கு பல்வேறுபட்ட நடைமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

2. ஆபத்துப் பகுப்பாய்வு

ஆபத்துப் பகுப்பாய்வின் அடிப்படைநோக்கம் ஆபத்தின் தன்மை மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் தாக்கமளிக்கும் அளவு உட்பட இலட்சணங்களை விளங்கிக் கொள்வதாக இருப்பதுடன் ஆபத்து பகுப்பாய்விற்கு, நிச்சயமற்ற நிலைமை, ஆபத்தின் பின்விளைவுகள், ஆபத்து மூலங்கள், மாதிரிகள், நிகழ்ச்சிகள், சம்பவங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் அவற்றின் செயற்திறன் தொடர்பாக விபரமாக பகுப்பாய்வுகள் உள்ளடங்கும். தரவுகளின் பல்வேறுபட்ட தன்மை, சிக்கலான நிலைமை, பகுப்பாய்வின் நோக்கங்களின் அடிப்படையில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை மற்றும் நம்பகத்தன்மை மற்றும் காணப்படும் வளங்கள் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படலாம். சந்தர்ப்பம் அல்லது நிலைமையின் அடிப்படையில் மற்றும் பாதுகாப்பின் பேரில் பகுப்பாய்வுதிறன் முறைமகள் தரமான பொருண்மையான அல்லது இதன் கலப்பு ஆகும்.

3. ஆபத்தின் மதிப்பீடு

தீர்மானம் எடுக்கம் செயற்பாட்டிற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல், ஆபத்து மதிப்பீட்டின் அடிப்படை நோக்கமாக குறிப்பிடலாம். ஆபத்துப் பகுப்பாய்வின் பெறுபேறுகள் நிர்ணயிக்கப்பட்ட ஆபத்து நியதிகள் என்பவற்றுடன் ஒப்பிடப்பட்டு கிடைக்கும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆபத்து முகாமைத்துவத்திற்காக மேலதிக நடவடிக்கைகளின் தேவைப்பாடு இனங்காணல் மதிப்பீட்டு செயற்பாட்டில் உள்ளடங்கும். அத்தீர்மானங்கள் பின்வருமாறு


- எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை
- ஆபத்துக்கான சிகிச்சை முறைகளை கருத்திற் கொள்ளுதல்
- அவதானத்தின் தாக்கங்களைமேலும் விளங்கிக் கொள்வதற்காக கூடுதலாக பகுப்பாய்வு செய்தல்
- காணப்படும் கட்டுப்பாடுகளை பேணிச்செல்லல்
- நோக்கங்களைமீண்டும் கருத்திற்கொள்ளல்

4. ஆபத்துக்களுக்கான சிகிச்சை

ஆபத்துகளுக்கான சிகிச்சை செயற்பாட்டின் நோக்கம் ஆபத்தை தீர்வு செய்வதற்காக மாற்று வழிகளை இனங்கண்டு செயற்படுவதாகும். அது கீழே காட்டப்பட்டுள்ளவாறு புனரமைப்புச் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.


- ஆபத்துக்கான சிகிச்சைக்காக மாற்று வழி தயாரித்தலும் தெரிவுசெய்தலும்
- தெரிவுசெய்யப்பட்ட மாற்றுத் திடடங்கள் மற்றும் செயற்படுத்தல்
- செயற்படுத்தப்பட்ட சிகிச்சை செயற்தினை மதிப்பீடு செய்தல்
- எஞ்சிக் காணப்படும் ஆபத்தின் தாக்கம் நிறுவனத்திற்கு ஏற்றுக்கொள்ள முடியுமா எனத் தீர்மானித்தல்
- ஏற்றுக்கொள்ள முடியாதெனின் மேலும் சிகிச்சை முறைகளை செயற்படுத்தல்

ஆபத்து வெப்ப வரைபடம் (Risk Heat Map)



ஆபத்துவெளிப்பாடு	நோக்கங்கள்	ஆபத்தை குறைக்கும் தந்திரோபாயங்கள்
நிதி ஆபத்து முகாமைத்துவம்		
1. திரவ மற்றும் நிதி முகாமைத்துவம்	சந்தை வாய்ப்புக்களுக்கு வேகமான பொறுப்பேற்றல் தெரிவிக்கும் உறுதிப்படுத்துவதற்காக உடனடி நிதனிய வழங்கும் இயலுமையை உறுதிப்படுத்துதல்	நீண்டகால கடன் மூலம் சொத்துக்களுக்காக நிதிவழங்கல்
	எப்போதும் "போதியளவு" திரவதன்மை மட்டத்தைப் பேணிச் செல்லல்	எப்போதும் கூட்டுத்தாபனம் குறுங்கால கடன் பெறும் வசதிகளைப் பெற்றுக் கொள்ளல்
		செலவின கட்டுப்பாட்டிற்காக நிதி அதிகாரம் பெறுமதி அடிப்படையில் பகிரப்பட்டுள்ளன.
		எதிர்ால நிதித் தேவைப்பாட்டிற்காக சமர்ப்பிக்கக் கூடிய புத்தகப் பெறுமதியை விட கருத்திற் கொள்ளக் கூடிய சந்தை பெறுமதியுடனான காணி மற்றும் கட்டிடங்கள் கூட்டுத்தாபனத்திடம் காணப்படுகின்றன.
		வெவ்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் நிதித் தேவைப்பாட்டை நிறைவேற்றிக்கொள்ளல்
2. வட்டி வீத ஆபத்து	உறுதியற்ற வட்டி வீதத்தின் பாதகமான தாக்கத்தை குறைத்தல்	கூட்டுத்தாபனத்தின் முதலீட்டிற்காக முடியுமான வரை முடியுமான அளவுவட்டி வீதத்தை பெற்றுக் கொள்வதற்காக வங்கியுடன் கலந்துரையாடல்
	கடன் எடுத்தல் கிரயத்தை குறைந்த மட்டத்தில் பேணுவதை உறுதிப்படுத்துதல்	உயர் கிரயத்தை குறைக்க கூடிய வகையில் உள்நாட்டு வட்டிவீதங்களில் பாதகமான தளம்பல்களை தவிர்ப்பதற்காக வழங்குனர்களிடமிருந்துகடன் பெற்றுக்கொள்ளல் மற்றும் கலந்துரையாடல
	பங்கின் மீதான இலாபத்தை உச்சப்படுத்தல்	குறைந்த gearing வீதத்தை பேணிச் செல்ல மற்றும் விளைவுள்ள பயனுள்ள மூலதன முகாமைத்துவம்.
வியாபார ஆபத்து முகாமைத்துவம்		
3. கொவிட் 19 ஆபத்து	உத்தியோகத்தர்களின் சுகாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்	சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிகளை கட்டாயமாக பின்பற்றுதல்
	தொடர்ச்சியான வியாபார தொழிற்பாடுகளை நடாத்திச் செல்வதை உறுதிப்படுத்தல்	வைரஸ் தாக்கம் தொடர்பாக தொழிலாளர்களுக்கு தேவையான அறிவினை வழங்குதல்
		எழுமாற்று அடிப்படையில் PCR பரிசோதனை மேற்கொள்ளல்
		மூலப்பொருள் மற்றும் முடிவுப்பொருள் தொடர்பாக பாதுகாப்பு இருப்பினை பேணுதல்
4. கடன் ஆபத்து	கடன்பட்டோர் கடன் தவிர்ப்பினை அண்மித்த ஆபத்தை குறைத்தல்	கடன் கொள்கையை அபிவிருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்தல்
		அனைத்து பிரதான வாடிக்கையாளர்களுக்கும் வங்கி பிணை பொறுப்பு, மற்றும் வைப்புக்களை மற்றும் பிணைகளைப் பெற்றுக் கொள்ளல்
		கடன் வழங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளரின் கடன் வழங்கும் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக கூடுதலான மதிப்பீடு செய்யும் செயற்பாட்டை பின்பற்றுதல்.
		கடன்பட்டோரின் மீதிகளை அண்மித்து மேற்பார்வை செய்தல் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் மற்றும் அச்செயல் நடவடிக்கைத் திட்டம் எதிர்பார்த்த வகையில் செயற்படுவதை உறுதிப்படுத்தல்
5. சொத்துக்கள் ஆபத்து	தீயினால், திருட்டினால் மற்றும் இயந்திர உபகரணங்கள் பழுதடைவதால் ஆபத்துக்களை குறைத்தல்	சுகல தொட்டுணரக் கூடிய சொத்துக்களுக்கும் விரிவான காப்புறுதி மேவுகை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
		கட்டாய தவிர்ப்பு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல்
		தீயணைப்பு போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல்
6. உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய ஆபத்துன	கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக போதியளவு உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்றை பேணுதல்	முறைமைக் கணக்காய்வு, இருப்புமற்றும் பணத்தை கணக்கிடல் உட்பட சகல கணக்காய்வுப் பிரிவினால் செயற்படும் கட்டுப்பாட்டு பொறிமுறையொன்றை செயற்படுத்தல்
		கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலின் இலக்குகளுக்கு இணங்குவதாக உறுதிப்படுத்துவதற்காக பாதீட்டு செயற்பாட்டிலும் பாதீட்டு கட்டுப்பாட்டு பொறிமுறையொன்றை செயற்படுத்தல்
7. நன்மதிப்பும் தொடர்புடைய ஆபத்தும	நன்மதிப்பிற்கு தாக்கம் ஏற்படுத்தும் காரணிகள் உருவாகுவதைத் தவிர்த்தல்	உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்காக தொடர்ச்சியான பயிற்சி, தரமுகாமைத்துவம் மற்றும் சான்றுறுதிப்படுத்தும் நிகழ்ச்சிகளை செயற்படுத்துதல்
	எமது செயற்பாட்டிற்கு புறம்பாக நன்மதிப்பு தொடர்பான நெருக்கடியொன்று ஏற்பட்டால் அதன் தாக்கத்தை குறைத்தல்	அவ்வப்போது உள்ளக மற்றும் வெளிவாரி தரப் பரிசோதனை மேற்கொள்ளல்
		உற்பத்தி வசதிகளுக்காக தொடர்ச்சியான முதலீட்டு மற்றும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல்
		வெளிவாரி தரக் கட்டுப்பாட்டு நிறுவனங்கள் மூலம் உறுதிப்படுத்தல்களை பெற்றுக் கொள்ளல்.
		தரப்படுத்தப்பட்ட உற்பத்தி செயற்பாடுகள்

8. மனித மூலதனமும் தொழிலாளர் ஆபத்தும	தடையின்றி தொடர்ச்சியான தொழிற்பாட்டு செயற்பாட்டை உறுதிப்படுத்ததல்	ஊக்குவிப்பு படியாகவும் நலன்புரி செயற்பாடுகள் மூலமும் ஊழியர் நலன்களை விரிவுபடுத்தல்
	ஒருமானிட எஜமானாக என நம்மை ஈர்த்தல், ஊக்கம் வெற்றிகரமாக செயல்படுகிறது, அபிவிருத்தியை தக்கவைத்தல் மற்றும் தரமான ஊழிய மூலதனத்தை ஈர்ப்பது	ஊழியர் ஆட்சேர்ப்பு, செயலாற்றல் மதிப்பீடு மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சிகள், தொடர்பான மனிதவளப் பிரிவின் செயற்பாடுகளை மேம்படுத்தல் செயலாற்றல் அடிப்படையிலான கலாசாரமொன்றை கூட்டுத்தாபனத்தில் பேணுதல்
		செயலாற்றல் பேரிலான கலாசாரமொன்றை கூட்டுத்தாபனத்தில் பேணிச்செல்லல்
9. தொழில்நுட்ப ஆபத்து	தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்து செயற்படல் காலாவதியானவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளல்	புதிய தொழில்நுட்பம் மற்றும் தானியங்கி செயற்பாட்டிற்காக தொடர்ச்சியான முதலீடு
		ஆண்டு பூராகவும் ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக முதலீடு செய்தல்
10. சந்தை போட்டி ஆபத்து	எமது சந்தைப் பங்கை உச்சப்படுத்தல்	உயர் தரமாக உற்பத்தியை சந்தைக்கு வழங்குதல
	அடிப்படை உற்பத்திகளின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.	கூறுவிலைகளில் போட்டித் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உற்பத்தி செயற்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரித்தல்
		தேவைப்பாடுகளை இனங்காண்பதற்காக சந்தை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்
		சந்தை பிரசித்தப்படுத்தல் மற்றும் இலக்கு விற்பனை மூலம் கூட்டுத்தாபனத்தின் இருப்பை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளல்
		காட்சிக் கூடங்களில் வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவ சேவை நிகழ்ச்சிகளை நடாத்துதல்
11. சுற்றாடல்,அரசியல் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆபத்து	எமதுகட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வெளிச்சூழலில் ஏற்படக்கூடிய எதிர்தாக்கங்களை குறைத்தல்	ஊழிய அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்குதல் மற்றும் இணங்குதலை உறுதிப்படுத்துதல்
	ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டிற்கு இனங்குதல்	சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறை நிறுவனங்களின் தேவைப்பாட்டுடன் இணங்கிச் செல்லல்



பைனஸ் மர பாதுகாப்பு மற்றும் பதணிடல்

பைனஸ் மரமானது ப்ளு ஸ்டெய்ன் (டீடரந ளுவயனை) பூஞ்சன நோய்க்கு உள்ளாவதன் காரணமாக வெட்டி வீழ்த்தப்பட்ட பின்னரும் பலகையாக அறுக்கப்பட்ட பின்னரும் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். இதனால் வெட்டி வீழ்த்தப்பட்ட பின்னர் தோல் நீக்கப்பட்டுள்ள இடங்களின் மேல் பூஞ்சைக் கொல்லி திரவம் பூசப்படல் வேண்டும். பூஞ்சைக் கொல்லி திரவமானது நீர்ப்பதார்த்தமாகக் காணப்படுவதால் பாரிய மழை காரணமாக கழுவப்பட்டுச் செல்லும் வாய்ப்பு காணப்படுவதனால் அவ்வாறு மழை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மீண்டும் பூஞ்சைக் கொல்லி திரவம் பூச வேண்டி ஏற்படும். பாதுகாப்புப் பூச்சினை தயாரிக்கும் பொழுது 1.5 லீற்றர் பூஞ்சைக் கொல்லி திரவத்தினை 100 லீற்றர் தண்ணீரில் கரையும் வண்ணம் கலக்க வேண்டும். (தேவையான அளவு திரவத்தினை மேற்குறிப்பிட்ட கலவையின் அடிப்படையில் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்).

அறுக்கப்பட்ட பலகையினை பாதுகாப்பதற்காக பயன்படுவது போரோன் நிவாரனியாக உள்ளதுடன் இதுவும் ஒரு நீர்ப் பதார்த்தமாகும். இதனால் பைனஸ் மரத்தினை நீண்ட கால முன் பதப்படுத்தலுக்கு உட்படுத்தப்படாது பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்பட முடியும். இப் பாதுகாப்பு முறையானது வினைத்திறன் மிக்கதாக இருந்த போதும் அதிக செலவைக் கொண்டதாகும். இதற்காக விசேடமாக உள்ள அமுக்க முறையில் போரோன் பாதுகாப்பு அலகுகள் தேவைப்படும் அதேவேளை இதற்கான பயிற்சி பெற்ற தொழிலாளர்களும் தேவைப்படுகின்றனர். அமிழ்த்தி வைக்கும் முறையிலும் பாதுகாப்பினை மேற்கொள்ள முடியும்.



நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு (CSR)

ஒரு பொறுப்புள்ள அரசாங்க நிறுவனமாக, அனைத்து உள்ளக மற்றும் வெளிவாரி தரப்பினரினதும் தற்போதய மற்றும் எதிர்கால நிலைத்திருதன்மையும் எங்களது நிலைத்திரு தன்மையும் அத்தயவசியமான காரணி என்று நாங்கள் நம்புகிறோம். அதற்கிணங்க, மர வியாபாரத்தை மேலும் பொறுப்புடனும் நிலைபேறானதாகவும் அபிவிருத்தி செய்வதற்கும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் புதிய தந்திரோபாயங்களை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.



சுற்றாடல் தொடர்பில் எமது அர்ப்பணிப்பு

காடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள ஒரு அரசு நிறுவனம் என்ற வகையில், சுற்றுச்சூழல் நிலையான வளர்ச்சிக்கு நாங்கள் அர்ப்பணிப்பு செய்துள்ளதுடன் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்கிறோம். நாங்கள் எப்போதும் உத்தரவாதம் அளிக்க முயற்சிக்கிறோம். எங்கள் செயற்பாடு மற்றும் அபிவிருத்தியுடன் இணைந்ததாக சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் நாங்கள் எல்லா முயற்சிகளையும் செய்கிறோம்.

இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக, அரச மரக் கூட்டுத்தாபனம் 2020 நிதியாண்டில் பின்வரும் திட்டங்களை செயற்படுத்தியிருந்தன

- அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்திச் செல்லப்படும் நாற்று மேடைகள் மூலம் இலவசமாக கன்றுகளை பகிர்ந்தளித்தல்



- அரச மரக் கூட்டுத்தாபனம் 14 பிராந்தியங்கள் மூலம் 26 நாற்றுமேடைகளை பராமரித்து செல்வதுடன் அவற்றின் பொருள் தரதியான பெறுமானத்துடன் கூடிய நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நாற்றுக்கள் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு இலவசமாக வழங்குதல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.





2020 ஆம் ஆண்டிற்காக அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நாற்று மேடைகளில் 120,000 அளவிலான நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன் 78,207 நாற்றுக்கள் மர வளர்ப்பு நாற்றுக்கள் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இலவசமாக வழங்கப்பட்டிருந்தன.

மேலும் “ஆராமாரோபா வனரோபா” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், அனுராதபுரம் மற்றும் பொலன்னருவ ஆகிய பிரதேசங்களில் 450 நாற்றுக்கள் அளவில் நடப்பட்டிருந்தன.

ஊழியர் தொடர்பில் எமது அர்ப்பணிப்பு

பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் பெறுமதி இனங்காணப்பட்டு கூட்டுத்தாபனத்தினால் தமது ஊழியர்களுக்காக பல்வேறு பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பயிற்றுவித்தல் கூடிய செயலாற்றலுக்காக உதவியாக இருப்பதுடன் அவர்களின் சேவை வாழ்க்கையின் சமநிலையை முகாமை செய்வதற்கு உதவியளிக்கின்றது.

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஹல்துமுல்ல மர தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயிற்சி மற்றும் தமது துறையில் அறிவினை மேம்படுத்துவதற்கு தேவையான ஊழியர்களை வெவ்வேறு பயிற்சிகளுக்காக தொடர்புபடுத்தல் மேற்கொள்ளப்படுவதுடன் மேலும் தேவையான அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநிறுவனங்களில் பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக அனுப்பி வைக்கப்படுகின்றார்கள்.

அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக ஹல்துமுல்ல மர தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் மூலமும் ஏனைய வெளிநிறுவனங்கள் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக ஊழியர்களை தொடர்புபடுத்தல் கீழே காட்டப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்ட நிறுவனம்	பாடநெறிகள்/ செயலமர்வுகள்	பாடநெறிகள்/ செயலமர்வுகள் எண்ணிக்கை	தொடர்புபடுத்தப்பட் ஊழியர்கள்
அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஹல்துமுல்ல மர தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்	களஞ்சிய உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் பயிற்சி செயலமர்வு	02	120
	கணனி பயிற்சி பாடநெறி	03	43
	இறக்குமதி செய்யப்பட்ட அரி மரங்கள் தொடர்பாக அறிவூட்டும் பாடநெறிகள	01	19
	தளபாடத் துறையை உயிர்ப்பித்தல் தொடர்பான பயிற்சி பாடநெறி	03	22
	தரப்படுத்தல் தொடர்பான பாடநெறி	02	75
	NVQ சான்றிதழ் பத்திர பரீட்சை பாடநெறி	01	17
	பலக ஒப்பமிடல் தொடர்பான பாநெறி	01	22
பிரதேசங்களில் செயற்படுத்தப்பட்ட செயற்திறன் நிகழ்ச்சித்திட்டங்கள்	பூஸ்ஸ	01	72
	பொலன்னருவ	01	30
	மொனராகல	01	40
	அனுராதபுரம்	01	30

வெளி நிறுவனங்கள் மூலம் (SDFL, SLSI, NIBM, CETRAC திட்டமிடல் பல்கலைக்கழகம்)	மனிதவள முகாமைத்துவம்		
	சந்தைப்படுத்தல் பயிற்சி பாடநெறி		
	நிதி நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி பாடநெறி		
	பெறுகை செயற்பாடு தொடர்பான பயிற்சி பாடநெறி		
	பொயிலர் தொடர்பான பயிற்சி பாடநெறி	44	164
	ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான பயிற்சி பாடநெறி		
	ஊழியர் ஊக்குவிப்பு தொடர்பான பயிற்சி பாடநெறி		
	வன விஞ்ஞான பட்டப்பின் தொடர்பான பயிற்சி பாடநெறி		
	அலுவலக உபகரண பராமரிப்பு தொடர்பான பயிற்சி பாடநெறி		
	உள்ளக கணக்காய்வு தொடர்பான பயிற்சி பாடநெறி		
பயிற்சிக்காக தொடர்பபடுத்தப்பட்ட மொத்த ஊழியர் எண்ணிக்கை			**654**

2020 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பயிற்சி பாடநெறிகளின் எண்ணிக்கை 61
மொத்த ஊழியர் எண்ணிக்கை 654
மொத்த தொகை ரூபா 2,359,705/-







அறிவூட்டுவதற்காக பயிற்சி நிகழ்ச்சிகள் அடிக்கடி நடாத்தப்படுவதுடன் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டிகளை பின்பற்றுவதற்கும் நியமங்களைப் பேணுவதற்கும் ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். வெளிப்படையாக தொழில் வழங்குனரான நாம் ஊழியர்களின் மருத்துவ பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கும் திடீர் விபத்து மூலம் ஏற்படும் நட்டங்களை தீர்வுசெய்வதற்கும் தேவையான காப்புறுதி மேவுகையை வழங்கியுள்ளோம்.

கொவிட் -19 வைரஸின் இரண்டாம் நிலைப் பரவலை தடுப்பது தொடர்பாக மற்றும் பரவல் குறித்து ஊழியர்களுக்குக் அறிவிப்பதன் மூலம் ஊழியர்களைப் பாதுகாக்க கூட்டுத்தாபனம் கடமைப்பட்டுள்ளது. மேலும், வைரஸ் பற்றிய தகவல்கள், ஆபத்தை குறைப்பது எப்படி, வைரஸின் நோய் அறிகுறிகள், பொதுவான சிகிச்சை மற்றும் பிற முக்கிய தகவல்கள் ஊழியர்களிடையே பிரச்சாரப்படுத்தப்பட்டன. இந்த கோவிட்-19 கட்டுப்பாட்டு உத்திகளுடன், அனைத்து ஊழியர்களுக்கும் முகமூடிகள் மற்றும் கிருமிநீக்க திரவங்கள் விநியோகிக்கப்பட்டன.



சமூக அபிவிருத்திக்காக எமது ஈடுபாடு

சமூகமானது கூட்டுத்தாபனத்தின் பிரதான பிரிவினராவதுடன், மரக் கைத்தொழிலின் வெற்றியும் இருப்புக்கும் சமூகத்தின் பங்களிப்பு அவசியமாகும். நீண்டகால உற்பத்திப் பிரிவிற்குரிய மரஉற்பத்தியாளர் என்ற வகையில் மொத்தத்தில் சமூகத்திற்கு இலாபமடையும் வகையில், வாடிக்கையாளர் திருப்தி தொடர்பாக சாதாரண விலையில் உயர் தரமுடைய உற்பத்திகளை வழங்குவது எமது பொறுப்பாகும். அதனடிப்படையில் 2020 ஆம் ஆண்டு சமூக அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றாக சுற்றாடல் அமைச்சின் ஒத்துழைப்புடன் காலி மற்றும் கலேகானயில் சுற்றுச்சூழல் சம்பந்தமாக 150 விஞ்ஞான ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக கொவிட்-19 தடுப்புத் தொடர்பான வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அரசிற்கு உதவியாக கூட்டுத்தாபனத்தினூடாக சகல ஊழியர்களிடமிருந்தும் ஒரு நாள் சம்பளம் கொவிட்-19 நிதியத்திற்கு வழங்கப்பட்டது.

2020 இல் ஆராய்ச்சிப் பிரசுரங்கள்

ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவினால் மரம் தொடர்பா ஆராய்ச்சி செய்து அவை ஆய்வுப்பத்திரங்கள், மாநாடுகளாகவோ பிரசரிக்கப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டு தொடர்பான விபரங்கள் கீழ் வருமாறு.

N.D. Ruwanpathirana, W.V.T.D. Amarasinghe, C.I.M. Archchi. 2020. Estimation of carbon retention potential in timber logs of State Timber Corporation, Sri Lanka Neela Haritha, vol.03, climate change secretariat, Ministry of Environment, Sri Lanka. pp 147-152.

Muthumala, C.K. 2020. Investigation of the strength parameters and physical properties of dry zone timber species, The Sri Lanka Forester, Forest department, Sri Lanka. Vol.40, pp, 27-36

Muthumala, C. K., Sudhira, De Siva, Arunakumara, K.K.I.U. and Alwis, P.L.A.G. 2020. Identification of Joint Efficiencies in 13 mm Finger jointed timber species in Sri Lanka, ICSBE2018 - LNCE 44 Springer nature.pte, ltd. Singapore. pp. 261-267.

Muthumala, C. K., DeSiva, Sudhira, Arunakumara, K.K.I.U. and Alwis, P.L.A.G., 2020. Investigation of the relationship between densities vs. mechanical properties of Sri Lankan timber species, ,ICSECM 2019 - LNCE Vol. 94, Springer nature.

Muthumala C.K, G S Y De Silva, Arunakumara K.K.I.U and Alwis P.L.A.G. 2020. Investigation of the best joint type for combining of the finger jointed timber panel in board production.. International Conference on Sustainable Build Environment, Kandy, Sri Lanka.

C.K. Muthumala, Sudhira De Silva, K.K.I.U. Arunakumara and P.L.A.G. Alwis., 2020. Finger-joint technique to mitigate climate change, NeelaHaritha Vol.3, 2020, Climate Change Secretariat, Ministry of Environment, Sri Lanka. pp. 147-152.

Balasooriya B.M.L.S., Amarasinghe, W.V.T.D., Weerakkody, W.J.S.K. and Muthumala C.K. (2020).

Development of Bucking Techniques to improve timber grading of Teak (Tectona grandis). Proceedings of 19 th Agricultural Research Symposium, Faculty of Agriculture and Plantation Management, Wayamba University of Sri Lanka, ISBN 978-955-8746.

Jinadari W.M., Weerakkody, W.J.S.K., Amarasinghe, W.V.T.D. and Muthumala C.K. (2020). Estimation of Above Ground Carbon Stock of Teak (Tectona grandis) Stands in Intermediate Zone of Sri Lanka. Proceedings of 19 th Agricultural Research Symposium, Faculty of Agriculture and Plantation Management, Wayamba University of Sri Lanka, ISBN 978-955- 8746 .

Muthumala CK, WVTD Amarasinghe, TS Mudalige. 2020. Assessment of Wood Properties in Lesser-Known Shorea Spp. in Sri Lanka. 11th International Conference on Sustainable Built Environment (ICSBE), Kandy, Sri Lanka. p. 82.

- இவ் ஆய்வுகளின் கண்டுபிடிப்புக்கள் வனம் மற்றும் விஞ்ஞான படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு மற்றும் ஆய்வாரளர்களுக்கு மிகவும் முக்கியமானதுடன் இந்த கண்டுபிடிப்புக்கள் அரச மரக்கூட்டுத்தாபனத்தின் பிரிவுச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டன.





பைனஸ் மரத்தினால் செய்யப்பட்ட தளபாடங்கள், உட்கூரைகள், சுவர் பேனல்கள் அல்லது கட்டிடங்களின் உட்புறத்தின் ஈரப்பதம் இல்லாத பகுதிகளில் பயன்படுத்தும் போது உயர் பதப்படுத்தல்கள் அவசியமில்லை. (ஸ்லீப்பர் உற்பத்தி செய்வதாக இருந்தால் சிகிச்சை முறையில், கிரியோசோட் அல்லது ACQ பதப்படுத்தியைப் பயன்படுத்திப் பதப்படுத்த வேண்டும்.

தளபாடங்கள் மற்றும் பிற மரத் தயாரிப்புக்களைத் தயாரிக்கும் போது (யதுகம) செயன்முறையைப் பயன்படுத்துவதால் தோராயமாக 3 மிமீ (நூல் அளவு) மரம் அகற்றப்படுகின்றது. எனவே, பாதுகாப்புகளை பொருத்துவது அவசியம் மரத்தில் 3 மிமீக்கு மேல் வெற்றிடத்தின் போது சிகிச்சை, 19 x 150 மிமீ, 25 x 150 மிமீ, 31 x 150 மிமீ வரை மற்றும் 50 x 125 மிமீ குறுக்குவெட்டுகளில் மரம் முழுமையாக செறிவூட்டப்பட்டுள்ளது.

Dipping முறைமையில் மரங்களை முறையாகப் பாதுகாக்கும் போது 19x150 mm குறுக்கு வெட்டு பாதுகாப்புக்காக 06 மணிநேரம் அமிழ்த்தி வைத்தல் போதுமாகும். மற்றை குறுக்குவெட்டுகளுக்கு 3 mm மேல் உட்செலுத்துவதற்கு குறைந்தபட்ச மணிநேரம் சுமார் 24 மணித்தியாலங்கள் அமிழ்த்த வேண்டும்.

பைனஸ் மரத்தின் நன்மைகள்

- இந்த தாவரங்கள் நீண்ட இழைகள் கூழ் மற்றும் காகித உற்பத்திக்கு பயன்படுத்துகின்றன.
- உட்கூரை, பெனல் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றன.
- தொலைபேசிகள் மற்றும் மின் இணைப்புகளுக்கு பயன்படுத்தப்படும்
- புகையிரத வீதிகளில் சிலப்பர்களுக்கா வெளிநாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.
- ஒலியா ரெக்சீன் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றது.
- தளபாட உற்பத்திகளுக்கு வெளிநாடுகளில் கருத்திற் கொள்ளக்கூடியளவு பயன்படுத்தப்படுகின்றன.
- மெல்லிய பலகை உற்பத்திக்காக பைனஸ் மரம் பயன்படுத்தப்படுகின்றது.





ஆண்டறிக்கை

அரசு மரக் கூட்டுத்தாபனம்

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2021 யூலை 29

எனது இல. ஐஈஎன்/சீ/எஸ்ரீசீ/ஏ/2020/1

தலைவர்
அரச மரக் கூட்டுத்தாபனம்

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச மரக் கூட்டுத்தாபனஅரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க காலக்கிரமத்தில் எனது அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைபபழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 ஆம் இலக்க 32 ஆவது பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் பொறுப்புக்கள் எதிரீடு செய்யப்பட முடியாத போதும் அதற்கு மரணாக மீளாய்வாண்டின் போது முழுமையாக வெட்டப்பட்ட சகல வன பயிர்ச்செய்கைக்குரிய வன பரிபாலன திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மூலதன பெறுமதி ரூபா 1,143,231,084 ஆல் பழைய தேக்கு வேர் மற்றம் புதிய தேக்கு வேர் இணைப்பதற்காக கூட்டுத்தாபனத்திற்கு பெறவேண்டிய ரூபா 53,384,642 எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் இறுதி இருப்பு, கிரயம அல்லது தேறிய நிகர பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் இறுதி இருப்பின் கிரயத்தை வ தேறிய நிகர பெறுமதி குறைவடைந்தமை, அவ்வேறுபாடு செலவினமொன்றாக இலாபத்திற்கு சீராக்கம் செய்ய வேண்டிய போதிலும் மேற்படி நியமத்திற்கு முரணாக கூட்டுத்தாபனதத்தினால் வியாபார இருப்பிற்காக இருப்பு குறைவிற்காக 15 சதவீதமான அதாவது ரூபா 244,674,912 ஒதுக்கீடு இறுதி இருப்பிலிருந்து கழித்து நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இருப்பு மிகை ஒதுக்கீடாக ரூபா 44,165,123 மற்றும் இருப்பு குறை ஒதுக்கீடாக ரூபா 54,329,480 தொகை இலாபத்திற்கு சீராகியதால் தேறிய பெறுமதி ரூபா 10,164,357 ஆல் இலாபம் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இல் 28 ஆம் பந்தியில் குறிப்பிட்டதன் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 5,328,908 ஆன இழப்பீடு கோரி கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த 5 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 294,000 ஆன நிகழத்தக்க சொத்துக்களுக்குரிய இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இல் 34 ஆம் பந்தியில் குறிப்பிட்டதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காசுப்பாய்ச்சல் கூற்றில் குத்தகை தவணைக் கொடுப்பனவு ரூபா 8,564,544 ஆன காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 12,150,297 ஆன காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டமை, நிறுத்தி வைத்த உழைப்புக்களிலிருந்து ஊழியர் கடன் சுழற்சி நிதியத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 13,570,520 தொகை காசு வெளிப்பாய்ச்சல் அல்லது காசு உட்பாய்ச்சலாக இடம்பெறாத போதும் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டமை பணிக்கொடை

கொடுப்பனவு ரூபா 71,813,395 காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிப்பதற்கு பதிலாக ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளுக்கு இடையே வேறுபாடான ரூபா 42,882,621 காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டமை, ஊழியர் கடன் கொடுப்பனவு ரூபா 151,863,773 காசு வெளிப்பாய்ச்சலாக மற்றும் ஊழியர் கடன் அறவீடு ரூபா 127,712,917 காசு உட்பாய்ச்சலாக குறிப்பிடப்படாமை மற்றும் வேறு வட்டி வருமானமான ரூபா 17,855,947 காசு உட்பாய்ச்சலாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்க வேண்டிய போதிலும் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பித்தல் இடம்பெற்றிருந்தது.

(உ) வரி அறவிடப்பட வேண்டிய வருமானத்த கணக்கிடும் போது இடமளிக்கப்படும் செலவினம் பணிக்கொடை கொடுப்பனவு ரூபா 12,892,239 குறைத்து சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு வருமான வரி கணக்கிடும் போது பணிக்கொடை சீராக்கம் வேறுபடுவதால் ஆண்டின் வருமான வரி ரூபா 1,055,918 ஆல் குறை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) கதுருவெல மரக் களஞ்சியத்தில் காணப்படும் வன குற்றி மரங்கள் தொடர்பான முடிவடைந்த 14 வழக்குகளுக்குரிய ரூபா 2,064,,022 ஆன இருப்புக்கள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி இறுதி இருப்பிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் இருப்பு அப்பெறுமானத்தினால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) பொலன்னருவ பிராந்திய அலுவலகத்தில் இருப்பு புத்தகங்களைச் சமப்படுத்தாமல் இருத்தமையால் சில மர பலகைகக்ள் அதிகளவில் சிதைவடைந்திருந்ததுடன், அதிகளவிலான மரக்குற்றிகள் இலக்கங்களுடன் இனங்காண முடியாமல் இருந்தமையும் பௌதீக இருப்பு மெய்மையாய்வு சரியாக மேற்கொள்ள முடியவில்லையென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட ரூபா 133,120,313 ஆன இறுதி இருப்பு பெறுமதி பிழையாக இருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,855,504,860 ஆன மர இருப்புக்களின் பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 கூட்டுத்தாபனத்தின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கை திகதியின் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்று கருத்திற் கொள்ளப்படும். இந்த ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்பாகும்.
நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் மேவுகை செய்யப்படாமல் இருப்பதுடன் நான் அது தொடர்பாக எவ்வித சான்றிதலொன்றோ அபிப்பிராயத்தை வெளியிடவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்குரிய எனது பொறுப்பு மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள பெற்றுக்கொள்ளுந் போது வாசிப்பு மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனையய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்துவதில்லை கருத்திற் கொள்வதாகும்.

கூட்டுத்தாபனத்தின் 2020 ஆண்டறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான அளவில் தவறாக குறிப்பிட்டுள்ளதாக நான் தீர்மானித்தால் சீராக்குவதற்காக நிர்வாக தரப்பினருக்கு அவ்விடயத்தை தெரிவிக்க வேண்டும். மேலும் சீராக்காமல் தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தால் அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புறையின் பிரகாரம் என்னால் உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தானம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடுகளையும் அறிக்கைளையும் முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாக தரப்பினருடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2.1.1 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் சபையினால் பேணப்பட்டிருந்தது.

2.1.2 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

2.1.3 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஸ)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டதன் மூலம் கீழே காட்டப்பட்டவற்றை குறிப்பிடுவதற்கு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் ஆளுகை சபை உறுப்பினர் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்புபட்டுள்ளதாக

2.2.2 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக

சட்டங்கள், விதிகள், பணிகள்	அவதானிப்புக்கள்
2002 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரினால் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத பதவியொன்றான பணிப்பாளர் சபை செயலாளர் பதவிக்காக வெளி நபரொருவரை பணிப்பாளர் சபை அனுமதியுடன் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஆட்சேர்த்து 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 337,000 தொகை மதியுரை சேவைகள் மற்றும் விசேட கொடுப்பனவுகளின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2.2.3 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் அதிகாரங்கள் கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக.

கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு இடையே விவசாய உற்பத்தி பிரம்பு ஏற்றுமதி போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் எதிர்பார்த்த பிரகாரம் பலகை உப பொருட்கள் உற்பத்தி மற்றம் விற்பனை இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே மரத்துடன் அண்மித்த பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்படாத பொருட்களை ஏற்றுமதி செய்தல் கூட்டுத்தாபனத்தின் நோக்கமாக இருந்த போதும் அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்

3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 1,009,459,934 ஆக இருந்ததுடன் ரூபா 6,797,675 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 1,490,500 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமும் மிகைத்திருந்த போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வன பரிபாலனத் திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 45,007,462 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 38,451,121, தொகை ஓராண்டிற்கு மேற்பட்டிருந்தது.

(ஆ) கதுருவெல களஞ்சியத்தில் 2014 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை காலப்பகுதிக்குரிய மரப் பலகை ரூபா 421,102 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக வழக்கு செயற்பாடுகள் பரீட்சிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகளை 2021 ஏப்ரல் வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மின்னேரிய பிரதேச அலுவலகத்திடம் 30 உத்தியோக விடுதிகள் காணப்படுவதுடன் 07 வீடுகள் மாத்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. 10 வீடுகள் உயிர் பல்வகைமை பூங்கா செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன் எஞ்சிய 13 வீடுகளும் விளைவற்ற வகையில் காணப்பட்டன.

(ஈ) மின்னேரிய களஞ்சியத்திற்குரிய காணப்பட்ட 170 வழக்குகளில் 32 வழக்குகள் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டிற்குரிய மரக் குற்றங்களுக்குரிய வழக்குகளாக இருந்ததுடன் அந்த மரங்களின் பெறுமதி ரூபா 1,667,882 ஆக இருந்தன. பழைய பலகைகள் அதிகளவில் சேதமடைந்து காணப்பட்டதுடன் இப்பலகைகள் பௌதீக ரீதியில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது மின்னேரிய பிராந்திய அலுவலகத்திற்குரிய ஹல்மில்லவ 03ஃ006 தேக்கு வேலைத்தளத்தில் இடம்பெற்றுள்ள 69 மரங்கள் காணாமல் போனமை முறைகேடு தொடர்பாக நடைபெற்ற சுயாதீன ஒழுக்காற்று பரிசோதனை குழுவினால் ஏற்பட்டிருந்த நட்டத்தை அதற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு 2018 நவம்பர் 17 ஆந் திகதி பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இப்பரிந்துரைக்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் முன்னால் தலைவால் அக்கட்டளையை செயற்படுத்துவதை இடைநிறுத்தியதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 2,994,536 ஆன நட்டமொன்ற ஏற்பட்டிருந்தது.

(ஊ) நுவரெலியா பிராந்திய அலுவலகத்திற்குரிய ரொப்ஹில் வேலைத்தளத்தில் 4 பிரிவுகளின் கீழ் 2172 தேக்கு மரங்களை வெட்டு ஒப்பந்தத்தை வழங்கும் கேள்வி மதிப்பீட்டின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் விலகியதால் அவர்கள் இணங்கிய விலைக்கே ஒப்பந்தத்தை வழங்கவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 2,725,541 தொகையொன்றும் கேள்வி நிபந்தனை 36 இன் பிரகாரம் வேலைததளத்திற்கு ஏற்பட்ட சேதங்களுக்காக வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கூட்டுத்தாபனம் செலுத்திய எனினும் ஒப்பந்தக்காரரிடம் அறவிடப்படாத ரூபா 253,250 தொகை மற்றும் உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட திகதியில் வேலை பூர்த்தி செய்யப்படாமை காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்படாத தண்டம் மற்றும் தாமதக் கட்டணங்கள் ரூபா 960,000 தொகையாக மொத்தம் ரூபா 3,918,791 ஆன நட்டமொன்று கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பல நாடுகளில் மென் மரமாகவும் பைனஸ் விரல் மூட்டுகளின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகன்றன. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பூஸ்ஸ வளாகத்தில் நிறுவப்பட்ட விரல் மூட்டு அலகு பைனஸ் மர தளபாடங்கள் மற்றும் மர பேனல்கள் மூலம் பலகைகள் (Boards) தயாரிக்கப்படுகின்றன.

மரச்சாமான்கள், மெல்லிய நிர்மாணம், வேலிதூ ண்கள், கதவு மற்றும் ஜன்னல் ஓரங்கள், கூரை பலகைகள், அத்துடன் வெளி நாடுகளில் ஸ்லீப்பர்கள் உற்பத்திக்காக பைனஸ் மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பதப்படுத்தப்பட்ட பைனஸ் மரங்களை தளபாட உற்பத்திக்காகவும் பயன்படுத்தலாம். நேரான கற்றயாக இருப்பதால் தொலைபேசி மற்றும் மின் இணைப்புகளுக்கு பயன்படுத்தப்படுகிறது தொடர்பு தூண்களும் மிகவும் பொருத்தமானதாக இருக்கும். மேலே குறிப்பிட்டுள்ள நன்மைகள் மத்தியில் தற்போது ஒலயோ ரெசினா உற்பத்தி தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றதுஇ. தற்போது வன பரிபாலனத் திணைக்களத்திடமுள்ள பைனஸ் பயிர்ச்செய்கை ஒலியோ ரெசின தயாரிப்பிற்காக தனியார் நிறுவனங்களுக்கு வருடாந்த குத்தகைக்கு வழங்கப்படுகின்றது. பைனஸ் மரங்களை வெட்டுவதால் ஒரு ஹெக்டேயரில் இருந்து 300-400 மீற்றர் அளவில் பலகை உற்பத்தி செய்யப்படுவதுடன் அதன் சந்தை மதிப்பு ரூபா 10 மில்லியனாக உள்ளது.



ஆண்டறிக்கை

அரசு மரக் கூட்டுத்தாபனம்

- வருடாந்த கணக்குகள்
- கணக்குகளுக்கான பொழிப்புக்கள்

இலாபம் அல்லது நட்டம் மீதான கூற்று
திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

	குறிப்புய	2020 ரூபா	2019 ரூபா
விற்பனைப் புரள்வு	2	3,981,688,028	4,282,180,939
கழி : விற்பனை கிரயம்	3	(2,235,922,452)	(2,391,369,247)
செயற்பாடு மீதான மொத்த இலாபம்		**1,745,765,576**	**1,890,811,692**
ஏனைய வருமானங்கள்	6		
செயற்பாட்டு	6.3	187,156,251	87,824,390
செயற்பாடற்ற	6.1	11,254,590	11,057,320
மொத்த தேறிய வருமானம்		**1,944,176,417**	**1,989,693,402**
விற்பனை மற்றும் விநியோக செலவினங்கள்	4	(695,762,455)	(742,594,548)
நிர்வாகச் செலவினங்கள்	5	(868,197,159)	(958,780,970)
நிதிச் செலவினங்கள்		(2,629,259)	(2,721,433)
நிதி வருமானங்கள்	6.2	191,933,650	227,350,832
வரிக்கு முன் இலாபம்		**569,521,194**	**512,947,283**
வருடத்திற்கான வரிவிதிப்பு	7	(105,614,520)	(195,523,628)
வருடத்திற்கான வரிவிதிப்பு		**463,906,674**	**317,423,655**

விபரமான வருமானக் கூற்று
திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

	குறிப்புய	2020 ரூபா	2019 ரூபா
வரிக்குப் பின் இலாபம்		**463,906,674**	**317,423,655**
		(511,025,803)	(50,000,000)
ஏனைய விரிவான வருமானங்கள்			
வருடத்திற்கான ஓய்வூதிய நலன் மிகை/குறை	18	(28,798,768)	159,663,864
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்			453,106,621
ஏனைய விபரமான வருமானங்கள்		**(28,798,768)**	**612,770,485**
வருடத்திட்கான மொத்த விபரமான வருமானங்கள்		**(75,917,897)**	**880,194,140**

நிதி நிலைமைக் கூற்று
திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளாவாறு

	குறிப்புய	2020 ரூபா	2019 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள்	8	1,560,609,739	1,654,290,912
உரிமையுள்ள பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்	10	4,810,252	9,250,483
அருவச் சொத்துக்கள்	9	501,278	904,151
உயிரியல்சார் சொத்துக்கள்	11	7,735,659	7,469,659
திறைசேரி வைப்புக்கள்		2,966,000	2,966,000
பிணை வைப்புக்கள்- ஊழியர்		71,738,627	70,063,718
முதலீடுகள்	12.1	220,191,174	690,692,130
முற்செலுத்தப்பட்ட ஊழியர் நலன்கள்		78,470,806	91,765,387
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்			34,931,466
மூலதனம் நடைமுறை வேலைகள்		19,613,439	18,831,013
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		**1,966,636,973**	**2,581,164,919**
நடைமுறைச் சொத்துக்கள்			
வியாபார இருப்புக்கள்	13	1,817,201,433	1,723,681,045
வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவைகள்	14	1,009,459,934	1,280,970,001
நிலையான வைப்புக்களிலான முதலீடு	12.2	2,271,758,751	1,387,897,720
காசும் காசுக்கு சமனானவையும்	15	221,136,821	248,339,857
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**5,319,556,939**	**4,640,888,623**
மொத்தச் சொத்துக்கள்		**7,286,193,911**	**7,222,053,542**
உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்களும்			
மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்			
அனுமதிக்கப்பட்ட மூலதனம்		**75,000,000**	**75,000,000**
மூலதனம் பங்களிப்புகள்	16	41,503,668	41,503,668
வருமான ஒதுக்கங்கள்		5,055,637,127	5,145,125,544
		5,097,140,795	**5,186,629,212**
ஊழியர் கடன் சூழல் நிதியம்	17	367,492,061	353,921,541
மொத்த உரிமையாண்மை		**5,464,632,856**	**5,540,550,753**
நடைமுறையல்லா பொறுப்புக்கள்			
ஓய்வூதிய நலன் கடப்பாடு	18	668,235,659	625,353,038
பிணை வைப்புக்கள் - ஊழியர்		71,738,627	70,063,719
குத்தகைப் பொறுப்பு - செயற்பாடு		5,491,621	9,876,015
வட்டி பொறுப்பு கடன் மற்றும் கடன் பெறுகைகள்	22	17,667,732	8,729,062
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு	7.2	73,062,908	-
மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்		**836,196,548**	**714,021,833**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வருமான வரிப் பொறுப்புக்கள்	19	84,925,974	212,169,023
வட்டி பொறுப்புக்கடன் மற்றும் கடன் பெறுகைகள்	22	4,416,258	1,260,469
வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை	20	896,022,276	754,051,464
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**985,364,508**	**967,480,956**
மொத்த பொறுப்புக்கள்		**1,821,561,055**	**1,681,502,790**
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்		**7,286,193,911**	**7,222,053,542**

உரிமையாண்மை மாற்றங்கள் தொடர்பிலான கூற்று

	"பங்களித்த மூலதனம்" ரூபா	ஊழியர் கடன் சுழலும் நிதியம் ரூபா	வருவாய் ஒதுக்கங்கள் ரூபா	மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா	மொத்தம் ரூபா
2019 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி	**41,503,668**	**341,506,845**	**4,277,346,100**	**-**	**4,660,356,613**
வருடத்திலான சீராக்கல்கள்					-
வருடத்திற்கான இலாபம்			267,423,655		267,423,655
வருடத்திற்கான ஊழியர் கடன் வட்டி		12,414,696	(12,414,696)		-
ஏனைய விபரமான வருமானங்கள்			159,663,864	453,106,621	612,770,485
2020 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி	**41,503,668**	**353,921,541**	**4,692,018,923**	**453,106,621**	**5,540,550,753**
வருடத்திற்கான சீராக்கல்கள்	-				-
வருடத்திற்கான இலாபம்	-	-	(47,119,129)		(47,119,129)
ஊழியர் கடன் வட்டி சீராக்கல்கள்	-	13,570,520	(13,570,520)		-
ஏனைய விரிவான வருமானங்கள்	-	-	(28,798,768)		(28,798,768)
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி	**41,503,668**	**367,492,061**	**4,602,530,506**	**453,106,621**	**5,464,632,856**

காசுப்பாய்ச்சல் கூற்று
திசெம்பர் 31ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது

	2020 ரூபா	2019 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் காசுப்பாய்ச்சல்		
வாடிக்கையாளரிடமிருந்து காசுப் பெறுவனவுகள்	4,491,821,014	4,267,710,115
வழங்குனர்கள் மறறும் ஊழியர்களுக்கு செலுத்திய காசு	(3,595,888,992)	(4,022,543,615)
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	**895,932,021**	**245,166,500**
செலுத்தப்பட்ட வருமான வரி	(124,863,194)	(302,603,341)
திறைசேரிக்கு செலுத்தப்பட்ட விசேட வரி	(511,025,803)	(50,000,000)
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)	**260,043,024**	**(107,436,841)**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்		
சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணம் - பெறுவனவு	(104,712,062)	(319,484,947)
உயிரியல் சொத்துக்கள்	(266,000)	(408,370)
முதலீடுகள்	(413,360,075)	140,174,909
முதலீடுகளிலிருந்தான வருமானம்	206,027,564	236,665,875
சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணம் - விற்பனை	126,122	95,026
நடைமுறை வேலைகள்	(782,426)	66,922,837
ஊழியர் கடன் சுழற்சி நிதியம்	13,570,520	12,414,696
தேறிய முதலீட்டிலிருந்தான காசு / (பயன்படுத்திய) காசு	**(299,396,357)**	**136,380,026**
நிதி செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	**-**	**-**
வட்டியுடனான கடன்கள் மற்றும் கடன்களிலிருந்து பெறப்பட்டவை	**12,150,297**	**6,174,832**
தேறிய காசு நிதி நடவடிக்கைகள் மூலம்/ (நிதிப் பயன்பாடு)	**12,150,297**	**6,174,832**
காசு மற்றும் அதற்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு /குறைவு	**(27,203,036)**	**35,118,017**
வருட ஆரம்பத்தில் காசு மற்றும் அதற்கு சமமானவை (குறிப்பு 15)	248,339,857	213,221,840
வருட இறுதியில் காசு மற்றும் அதற்கு சமமானவை (குறிப்பு 15)	221,136,821	248,339,857



நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

1.1.1 தாபித்தல்

1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ், 1968 ஏப்ரல் மாதம் அரச மரக் கூட்டுத்தாபனம் ஒரு கூட்டுத்தாபனமாக தாபிக்கப்பட்டது.

1.1.2 நிதிக்கூற்றுக்களுக்காக அங்கீகாரம் கிடைத்த திகதி

2021 மார்ச் 09 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

1.1.3 ஊழியர் எண்ணிக்கை

2020 திசெம்பர் 31 ஆந் திகதியன்று கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 1708 ஆகும். (2019 – 1803 ஆகும்)

1.1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகிய பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரியது

1.2 முன்வைத்தல் அடிப்படை

1.2.1 இணக்கம் தொடர்பான கூற்று

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் (ICASL) வெளியிடப்பட்டுள்ள விதந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (LKAS & SLFRS) ஆகியவற்றுக்கு இணங்க, கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியன்று மற்றும் அக்காலப்பகுதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைமைக் கூற்று, விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றுடனான கணக்குகளுக்கான குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.2 மதிப்பீட்டு அடிப்படை

கிடைக்க வேண்டிய ஊழியர் கடன் மற்றும் வியாபார கடன்பட்டோர் என்பன நியாயமான பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ளதுடன், அவற்றைத் தவிர ஏனைய பெறுமானங்கள் நிதிக்கூற்றுக்களில் வரலாற்றுக் கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.3 பாவனையிலுள்ள மற்றும் முன்வைத்தல் பண அலகு

நிதிக் கூற்றுக்கள் கூட்டுத்தாபன கொடுக்கல் வாங்கலில் பயன்படுத்தப்படும் பண அலகாகிய இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளது. விசேடமாகக் குறிப்பிடப்படாதுவிடின், அனைத்து நிதித் தகவல்களும் மிகக் கிட்டிய ரூபா பெறுமதியைப் பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன.

1.2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பயன்

சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவினங்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கைகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய மதிப்பீடுகள், தீர்மானங்கள், ஊகங்கள் ஆகியவற்றை முகாமை மேற்கொள்ளுதல் வேண்டும் என நிதிக் கூற்றுக்களை முன்வைத்தலின் போது வேண்டப்படுகின்றது. மதிப்பீடு மற்றும் அடிப்படை ஊகங்கள் என்பன முன்னைய அனுபவங்கள் மற்றும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் நியாயமானது என நம்பும் பல்வேறு விடயங்கள் ஆகியவற்றில் தங்கியுள்ளன. உண்மையான பெறுபேறானது, இம் மதிப்பீடுகளை விட வேறுபடலாம். மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை ஊகங்கள் தொடர்ந்து செல்லல் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். திருத்தப்பட்ட கணக்காய்வு மதிப்பீடுகள் அம்மதிப்பீடுகள் திருத்தப்பட்ட காலப்பகுதிக்கு மற்றும் அவை தாக்கத்தை ஏற்படுத்தும் எதிர்காலப்பகுதிக்கு சீராக்கம் செய்யப்படும்.

1.2.5 அந்நியச் செலாவணி பரிமாற்றம்ங

வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் இலங்கை ரூபாவிற்குப் பரிவர்த்தனை செய்யப்படுவது கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற நாளில் இருக்கும் நாணயப் பெறுமதியின் அடிப்படையிலேயாகும்.

1.2.6 வரி அறவிடல்

வருமான வரிக்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருமானங்கள் மற்றும் செலவினங்களின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், 2006 இன் 10 ஆம் இலக்க மற்றும் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரமாணங்கள் மற்றும் பிற்காலத்தில் திருத்தங்களுக்கும் அமைவாக கணக்கிடப்பட்டுள்ளது.

1.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் முன்வைக்கப்பட்ட இந்நிதிக் கூற்றுக்களில் எல்லா காலப்பிரிவிற்குள்ளும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1.3.1 சொத்துக்கள் மற்றும் பெறுமதி கணிப்பீட்டு அடிப்படை

1.3.1.1 சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

1.3.1.1.1 இனங்காணும் அடிப்படை

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் உருப்படிகள் திரண்ட தேய்மானத்தையும் மற்றும் சேதத்துக்குள்ளான பெறுமதி இழப்பினையும் கழித்து கிரயத்தில் குறிக்கப்படும். (காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக நியாயமான பெறுமதி அடிப்படையில்) சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது அதற்கு நேரடியாக ஏற்பட்ட செலவினங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் பிரத்தியேகமான உருப்படிகளாகக் கணக்கு வைக்கப்படும். சொத்துக்கள் பொறித்தொகுதிகள், உபகரணங்கள் முதலில் செலவினமாக இனம்காணப்படும்.

1.3.1.1.2 மீள் மதிப்பீட்டு மாதிரி

மீள் மதிப்பீடுகள் முறைப்படி மேற்கொள்ளப்படுவதுடன், அது கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் ஆண்டிறுதியில் நியாயமான பெறுமதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகவும் கொள்வனவு பெறுமதியை விட மதிப்பீட்டுப் பெறுமதி மாறுபடாது.

மோட்டார் வாகனம் (மோட்டார் சைக்கிள் தவிர) மீள் மதிப்பீட்டின் போது அவற்றின் நியாயமான பெறுமதி மீள் மதிப்பீட்டின் பெறுமதியுடன் தொடர்ச்சியாகத் தயாரிக்கப்படுகின்றது. அன்றைய நாளில் காணப்படும் முழுத் தேய்மானத்தின் பெறுமதி மொத்த நியாயமான பெறுமதி மற்றும் சேதம் ஏற்படுத்தும் இழப்பு சரி செய்யப்பட்டதன் பின்னர் நியாயமான பெறுமதி எனும் இரண்டினதும் வேறுபாட்டிற்கு சமமான முறையில் சரி செய்யப்படும்.

மீள் மதிப்பீட்டின் பெறுபேறு ஒன்றாக சொத்துக்களின் நியாயமான பெறுமதியில் அதிகரிப்பொன்று ஏனைய நீட்டிப்பு வருமானங்களின் கீழ் இனங்காணப்பட்டதுடன், அது உரிமையாண்மையில் மறு மதிப்பீட்டு பெறுமதியுடன் கூட்டப்படும். முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் குறிப்பிடப்பட்ட அந்த சொத்தில் மறு மதிப்பீட்டு பெறுமதி குறைவதும், மீண்டும் திருப்புவதற்குள்ள திறனின் அளவின் மேல் இந்த அதிகரித்தல் இலாபம் / நட்டத்தில் இனங்காணப்படும்.

மீள் மதிப்பீட்டின் பெறுபேறாக சொத்துக்களில் நியாயமான மதிப்பில் குறைவொன்று நடப்பு ஆண்டில் இலாபத்தில் / நட்டத்தில் இனங்காணப்படும். இக்குறைதல், அச்சொத்துக்குரிய மறு மதிப்பீட்டுப் பெறுமதியில் காணப்படும் செலவு மீதி வேறுபாடுகளின் அடிப்படையில் ஏனைய நீட்டிப்பு வருமானமாக இனங்காணப்படும்.

மோட்டார் வாகன சொத்தை அடையாளம் காணும் போது அது தொடர்பான மீள் மதிப்பீட்டுப் பெறுமதி நேரடியாக நிறுத்திவைத்த வருமானத்துக்கு மாற்றப்படும்.

1.3.1.1.3 சொத்துக்கள் விற்பனை மீதான இலாபங்கள் / நட்டங்கள்

சொத்துக்கள் விற்பனை மீதான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் (தேறிய விற்பனையின் போது பெறுவனவு சொத்துக்களின் முகப்பு பெறுமதி வித்தியாசமாக கணக்கிடப்பட்ட) சொத்துக்கள் விற்பனை செய்யும் ஆண்டில் வருமானக் கூற்றுக்களில் ஏனைய வருமானங்கள் / செலவினங்களின் கீழ் காண்பிக்கப்படும்

1.3.1.1.4 பின்தொடரும் கிரயங்கள்

நிலையான தன்மையுடைய வியாபாரமொன்றை நடாத்திச் செல்வதற்கு அல்லது வியாபாரத்தின் உழைப்பு இயலளவினை அதிகரிப்பதற்காக செலவாகும் பிற்போடப்பட்ட செலவினம் மூலதனச் செலவினமாக கருதப்படுவதுடன் அவ்வாறான செலவினங்கள் முன்கொண்டு வரப்படும் பெறுமதியிலிருந்து இனங்காணப்படும். அவ்வாறே ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் அவ்வப்போதான பராமரித்தல் செலவுகள் வருமானம் உழைப்பதற்கு ஏற்பட்ட செலவாக இனங்காணப்படும்.

1.3.1.1.5 அகற்றுதல்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை அகற்றுகையில் அல்லது அதன் பாவனையில் எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாத போது அவற்றை முன்கொண்டு வருவது நிறுத்தப்படும். இவ்வாறு சொத்துக்களை அகற்றும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் விரிவான வருமானக்கூற்றில் சீராக்கம் செய்யப்படுவதுடன் இலாபம் வருமானமொன்றாக கருதப்படமாட்டாது.

1.3.1.1.6 பெறுமானத் தேய்வு

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலம் முழுதும் நேர்கோட்டு அடிப்படையில் விரிவான வருமானக்கூற்றில் பெறுமானத் தேய்வு கழிக்கப்படும். இறையில் காணி தேய்மானத்திற்கு உட்படாது. உரிய வீதங்கள் கீழ்வருமாறு.

நிலையான கட்டடங்கள்	2.5%
பகுதி நிலையான கட்டடங்கள்	30%
இயந்திர உபகரணங்கள்	10%
வாகனங்கள்	20%
பாதைகள் மற்றும் புகையிரத பாதைகள்	5%
குத்தகை நிலங்கள்	5%
பாதைகள் அமைத்தல்	10%
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	15%
அலுவலக உபகரணங்கள்	15%
பல்வேறு சொத்துக்கள்	20%
கணினிகள்	20%
மின் உபகரணங்கள்	10%
கருவிகள் மற்றும் உபகரணங்கள்	20%
காணி அபிவிருத்தி	10%

1.3.1.2 பூர்த்தியடையா மூலதன வேலைகள்

நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் பூர்த்தி செய்யப்படாத வருடத்தினுள் ஏற்பட்ட மூலதனச் செலவினங்கள் முடிவுறா மூலதன வேலைகள் எனக் காட்டப்பட்டுள்ளதுடன், வருடத்தினுள் வேலை பூர்த்தியாகி பாவனைக்குப் பொருத்தமான நிலைக்கு வந்ததன் பின்னர் அவை சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்படும்.

1.3.1.3 அருவச் சொத்துக்கள்

அருவச்சொத்துக்கள் கணினி மென்பொருள் கொள்வனவிற்காக ஏற்பட்ட செலவுகளையே முழுமையாகக் கொண்டுள்ளன. அருவச் சொத்தொன்று அதன் கிரயத்தை நம்பகமான முறையில் கணிப்பிட முயுமாயின் மற்றும் அதன் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் சாத்தியம் காணப்படும் எனின் மாத்திரமே இனங்காணப்படும். கையேறகப்பட்ட அருவச் சொத்துக்கள் கிரயத்தின் ஆரம்ப இனங்காணலின் மீது அளவிடப்படும். அருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து திரண்ட தேய்மானத்தையும் சேதத்திற்குள்ளான திரண்ட பெறுமதியையும் கழித்து கணிப்பிடப்பட்டுள்ளன. பின்னர் மேற்கொள்ளப்பட்ட செலவு அதன் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கும் போது மாத்திரமே மூலதனமாக்கப்படும். தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்டு ஐந்து வருட ஆயுட்காலம் முழுதும் இலாபம் அல்லதுநட்டக் கூற்றில் இனங்காணப்படும்.

1.3.1.4 உயிரியல் சார் சொத்துக்கள்

